# சைவநீதி



வெகுதானிய ஆடி

ரூ. 20/-

உ

சிவமயம்

# சைவ நீதி

## பொருளடக்கம் :

1. விரதம் 1

ஆசிரியர்

2. வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் 2

3. தம்பிரான் தோழர்

சிவ சண்முகவடிவேல் 5

4. முதலை உண்ட பாலகனை வரவழைத்தது

வித்துவான் வ. செல்லையா 9

5. காம்பினொடு நேத்திரங்கள்

முருக வே. பரமநாதன் 11

6. ஆலந்தான் அமுதாக்கிய அண்ணலின் அருண்ணலம்

பண்டிதர் மு. கந்தையா 13

7. செந்தமிழ்ச் சைவச் சிந்தனைச் செல்வர்களுக்கு

பண்டிதர் மு. கந்தையா 15

8. தீட்சை 22

9. திருவாசகச் சிந்தனை
நீத்தல் விண்ணப்பம்

பண்டிதர் சி. அப்புத்துரை 24

10. திருவிளையாடற் புராணம்:
வெள்ளை யானை சாபம் தீர்ந்தமை

கூடலான் 27

10. மாதிரி வினாத்தாள் 29

உ

சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# சைவநீதி

மலர் 2 வெகுதானிய ஆடி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் இதழ் 4

கௌரவ ஆசிரியர்
சைவப்புலவர்மணி
வித்துவான்
திரு. வ. செல்லையா

நிர்வாக ஆசிரியர்
சிவஸ்ரீ பால
ரவிசங்கரக் குருக்கள்

திரு.செ. நவநீதகுமார்

42, டிவாஸ் ஒழுங்கை,
கிராண்ட் பாஸ்,
கொழும்பு 14.
தொலைபேசி: 423895

## விரதம்

வழிபாடு ஆன்மார்த்தம், பரார்த்தம் என இருவகைப்படும். ஆன்மார்த்தம் தனக்காகத் தானே செய்து கொள்ளும் வழிபாடு, பரார்த்தம் பலரும் வழிபட்டு உய்யும் வண்ணம் ஆலயங்களில் நிகழும் பூசை உற்சவம் போன்றன.

உத்தராயணம் எனப்படும் தைமாதம் தொடங்கி ஆனி மாதம் வரை உள்ள காலப் பகுதியில் பரார்த்த வழிபாடான ஆலய உற்சவங்கள், விழாக்கள் நிகழ்கின்றன. ஆடி தொடக்கம் மார்கழி ஈறாக உள்ள தெட்சணாயன காலத்தில் ஆன்மார்த்த வழிபாடான விரதங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. நவராத்திரி, கேதாரகௌரி விரதம், கந்தசஷ்டி, விநாயக சஷ்டி, திருவெம்பவை போன்ற விரதங்களை மக்கள் அநுட்டிக்கின்றனர் விரதங்களை உரிய முறைப்படி ஒழுங்காக அனுட்டித்தாற்றான் உரிய பலனைப் பெறலாம். ஆகவே விரதம் பற்றிச் சிவற்றை நாம் தெரிந்து கொள்வது அவசியம்.

விரதமாவது மனம் பொறி வழி செல்லா நிற்றற் பொருட்டு உணவைச் சுருக்கியேனும் விடுத்தேனும் மனம், வாக்கு, காயம் ஆகியவற்றால் இறைவனை வழிபடுதல் ஆகும். சிவதீட்சை பெற்றவர்களே விரதம் அனுட்டிக்கத்தகுதியுடையவர்கள்.

நோயாளர், வயோதிபர், குழந்தைகள், மாதவிலக்கான பெண்கள், ஆசௌசிகள் விரதமனுட்டிக்கத்தகுதியற்றவர்களாவர். இவர்கள் தமக்காக இன்னும் ஒருவரைவரித்து அவர்கள் மூலமாக அவ்விரதத்தை அனுட்டிக்கலாம். பெற்றோர் தமது பிள்ளைகளுக்கும், பிள்ளைகள் தமது பெற்றோருக்கும், கணவன், மனைவிக்காகவும் விரதமனுட்டிக்கலாம். அல்லது ஒரு குருவின் மூலம் இதை நிறைவேற்றலாம்.

விரதத்திற்கு முதல் நாளன்றே சுத்த போசனம் மாமிச உணவைத் தவிர்த்தல் அவசியம். விரததினத்தன்று அதிகாலையில் நித்திரை விட்டு எழுந்து நீராட வேண்டும். தோய்த்து உலர்ந்த ஆடைகளை உடுத்துச், சந்தியா வந்தனம் அல்லது அனுட்டானம் பார்த்தல் முறைப்படி செய்து ஜபம் பண்ணித் தோத்திரம் செய்து இறைவனைத் தியானித்து வழிபடல் வேண்டும். வீட்டிலே தீபமேற்றி பூவும், நீரும் கொண்டு வழிபாடு செய்து ஆலய தரிசனம் செய்தல் சிறந்தது. உருத்திராக்கதாரனம் முக்கியமானது. காலையில் உணவை விடுத்துப் பகற் பொழுது உண்டு இரவில் பால்பழம் அல்லது பலகாரம் உட்கொள்ளுவது சாதாரணமான விரதம். சிறப்பான விரதங்களுக்கு உணவு முறையில் மாற்றம் உண்டு. உபவாசகாலத்து முதல் நாள் பகலில் ஒரு பொழுது உண்டு உபவாசத்தின் மறுநாட் காலையில் 6 நாளிகை அதாவது காலை 8 1/2 மணிக்கு முன்னர் பாரணை பண்ணிக் கொள்ள வேண்டும். பாரணமாவது உபவாசத்திற்கு பின் செய்யும் போசனம். விரதகாலங்களில் பகலில் நித்திரையைத் தவிர்க்க வேண்டும். பாரணை பண்ணிய தினத்தன்று பகல் நித்திரை ஆகாது. பாரணை பண்ணும் போது ஒரு சிவனடியாரையாவது அழைத்து உடனிருந்து உண்ணுதல் சிறந்தது. தரையில் தர்ப்பை, அல்லது பாயில் இறைவனைச் சிந்தித்து நித்திரை செய்தல் வேண்டும். அன்று ஆலயத்தில் நெய் விளக்கேற்றல் சிறந்தது.

உ
சிவமயம்

# வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம்

## தோற்றம்

கடந்த பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், வெள்ளவத்தை மயூரபதியில ஒரு நெசவாலை உருவாகியது. 1888 ஆம் ஆண்டுவரையில் இது நிகழ்ந்திருக்கலாம். குறிப்பிட்ட நெசவாலையிற் பணி புரிவதற்கு வேண்டிய வினைத்திறம் படைத்தோரைத் தென்னிந்திய மாநிலங்களான தமிழகம், கேரளம் முதலிய பகுதிகளிருநது தருவித்தனர். அவர்கள் வாழ்வதற்கெனத் தொடர் வீடுகள்– ஐந்து தொடர் – அமைத்துக் கொடுக்கப்பட்டன. அங்கு வாழத் தொடங்கியவர்களின் அன்றாடத் தேவைகளுள் வழிபாடு இன்றியமையாததாகியது. அத்தொடர் வீடுகளுள் ஒன்றில், இப்போதுள்ள ஆலயத்தின் வடமேற்குப் பகுதியில், ஒரு அறையில் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் வழிபாடு ஆரம்பமாயது. அந்த அறையின் முன்பாக இரு அரச மரக் கன்றுகளையும் ஒரு வேப்ப மரக்கன்றையும் ஒன்றாக நாட்டி இரு பெண் மணிகள் வளர்த்தனர். அக்கன்றுகளிடையே ஒரு சூலத்தை நாட்டிச் ஸ்ரீ காளியம்பாளென வழிபடவுந் தொடங்கினர். வேம்பும் அரசும் சேர்ந்து வளர்ந்தால் அம்மனும் சிவனும் என நம் பண்டைய மக்களிடையே ஒரு ஐதிகம் இருந்தது. அப்படியான இடங்களிற் கோயிலமைப்பு வந்துவிடும். இங்கே சூலததையும் நாட்டி வழிபாட்டையும் ஆரம்பித்து வைத்ததால் வழிபடுமுறைகள் வேகமாக வளர்ச்சியடையத் தொடங்கின. புனிதமான உள்ளங்களிலே தோன்றும் தூய எண்ணங்கள் வளர்ச்சியடைவதில் எந்தவித தடையுமிருக்காது. இதற்கு எடுத்துக்காட்டாக மயூரபதி அம்பாள் ஆலய அபிவிருத்தியைக் காட்டலாம். அந்த மரங்கள் ஓங்கி வளர்ந்துள்ளமை போன்று அன்னை வழிபட்டு முறைமையும் வளர்ந்துள்ளது.



> அரசு வேம்பு மரங்களினடியில் சூலத்தை நாட்டித் தொடங்கப்பட்ட ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் வழிபாடு

## வளர்ச்சிப் படிகள்

காலம் பல மாற்றங்களைக் கண்டது. நெசவாலை நிர்வாகம் பெரும் மாற்றத்திற் குள்ளாகியது. தொழிலாளரின் வாழ்விடமாயமைந்த தொடர் வீடுகள் அகற்றப்பட்டன. மாடிக் கட்டிடங்கள் அந்த இடத்தை நிரப்பின. ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயம் மாடி வீட்டின் ஒரு அறைக்கு மாற்றம் பெற்றது.

இந்த வேளை ஏகாம்பரம் கங்காணியார் தலைமையை ஏற்று நடத்தினார்கள். அவரைத் தொடர்ந்து இரத்தினவேலு முதலியாரின் தலைமையிலான பரிபாலன சபை நிர்வாகத்தைக் கவனித்தது. 1918 வரையில் இநத நிர்வாகம் ஆரம்பித்திருக்கலாம். 1923 வரையிலான காலகட்டத்தில் அரச வேப்ப மரங்களைச் சுற்றி மதில் போன்ற தொரு அமைப்பை உணடாக்கினர். தொடாந்து சிவப்பிரகாசம் பேராயிர உடையார் தலைமை தாங்கிய சபை நிர்வாத்தைப் பொறுப்பேற்றது. 1977 வரையிலான காலப் பகுதி நிர்வாக நலிவிற்குரிய காலமெனலாம். இந்த 1977 இற்கு அண்மையான காலப் பகுதியிலேதான் இ.பி.சுப்பிரமணியம் என்பவரைத் தலைவராகக் கொண்ட சபையினர் பரிபாலனத்தைக் கையேற்றனர். இவர்கள் காலத்திற் சிறப்பான நிகழ்வுகள் பல இடம் பெற்றுள்ளன. 1977 இல் வரதராசப் பெருமாள் ஆலய முன் மண்டப அபிவிருத்தி அரசினர் ஆதரவுடன் நடைபெற வழி கோலப்பட்டது. 1980 இல் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் புதிய வீடுகள் பல அமைக்கப்பட்டன. அன்னை ஸ்ரீ பத்திரகாளி அம்பாளுக்கு ஒரு சிறு பகுதி ஒதுக்கப்பட்டது. 4X3X2½ என்னும் அளவில் சிறியதொரு மாடமும் கட்டப்பட்டது. அந்த வேளை எல்லோரும் துன்பம் அடையும் வகையிலானதொரு சம்பவம் நிகழக்கூடிய சாத்தியம் உருவாகியது. அன்றுதான் அன்னையின் அற்புதத்தை நாமெல்லாம் உணர முடிந்தது. அன்பர்கள் அடியவர்கள் எல்லோரும் ஆனந்தக்களிப்பில் மூழ்கக் கூடிய விதமாகச் செயல்கள் நடக்க வேண்டிய முறைப்படி நடந்தேறின. மண்டபத்தில் அன்னை கருகற் சிலை ஊடாக அருட் பிரவாகும் செய்து கொண்டிருந்தாள். அந்த நிகழ்வு இ. பி. சுப்பிரமணியம் தலைமையிலான பரிபால சபையின் சாதனை என்றுதான் சொல்ல வேண்டும். இல்லை; அன்னை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள், பரிபாலன சபை உறுப்பினர்கள் உள்ளத்து உயிர்த்த உழைப்பின் வழியே எல்லாம் நல்லபடி நிறை வெய்தி இருக்க வேண்டும். அதைத் தொடர்ந்து கும்பாபிஷேகமும் நாப்பத்தெட்டுத்தினங்கள் மண்டலாபிஷேகமும் நடை பெற்றன.

1983 இல் நாட்டில் நிகழ்ந்த அராஜக நிகழ்வுகளுக்குப் பின்னும் அன்னையின் ஆலயம் எந்தவித பாதிப்புமின்றித் தலை நிமிர்ந்து நின்றது. இந்த வேளை நிர்வாகத்திற்குச் சிறிய தொரு தளர்வு ஏற்பட்ட போதும், மீண்டும் அன்னையின அருளாட்சி எல்லோரையும் உற்சாக நிலைக்குள்ளாக்கியது. அன்னையின் அருட்பிரவாகும் புதியதொரு ஆலய அமைப்பைக் காண வைத்தது. 1987.03.22 இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டுத் திருப்பணி வேலைகள் வேகமாக வளர்ந்தன. 1987.11.27 இல் விமரிசையான கும்பாபிஷேகமும் தொடர்ந்து மண்டலாபிஷேகமும் இடம் பெற்றது.

தென்கிழக்கை நோக்கிய நிலையில் அம்பாள் சந்நிதி; அம்பாள் சந்நிதியின் பின்னே பழைமை வாய்ந்த பாரிய விருட்சங்கள்; அவற்றைச் சுற்றி சீமெந்தினாலான அழகிய மேடை; அரச வேப்ப மரங்களை உள்ளடக்கிச் சதுரமான ஆலயம்; அன்னையின் வலது புறம் விநாயகரும் இடதுபுறம் முருகனும் சிறிய சந்நிதிகளில் இடம் பெறுகின்றனர். விநாயகனின் முன்னே மற்றோர் அலங்கார சந்நிதியில் அலங்கார பூஜிதையாகச் சுதைக்கலவையாலான பெரிய பத்திகாளி உருவம் பரிமளிக்கின்றது. விநாயகனை வணங்கி, மூலமூர்த்தியாகிய அன்னையை வழிபட்டு, விநாயருக்கு முன்னுள்ள சுதையினாலாய பெரிய ஸ்ரீ பத்திரகாளியைத் தரிசித்து மரத்தைச் சுற்றியுள்ள

மேடைவழி வலம் வருவோமானால் வடகிழக்குப் பகுதியில் திருப்பாற் கடலிற் பள்ளிகொள்ளும் கண்ணனைத் தரிசிக்கலாம். தொடர்ந்து படிகளில் இறங்குமிடத்தே வலமாக நாகதம்பிரானும், இடதுபுறம் சிவலிங்கப் பெருமானும் வெவ்வேறு அலங்கார சந்நிதிகளிலே தரிசனமாவர். அப்படியே அன்னை சந்நிதியை நோக்கிச் செல்லும்போது நவகோளதிபரும், நாய்வாகனனும் எமது பார்வைக்குள்ளாவர். இந்த வகையிலமைந்த ஆலயத்திற்கு விமான அமைப்பு இல்லை. மரத்தின் பாரிய கிளைகளே சிறப்பாக வளர்ச்சி பெற்று மேற்புறத்தை மூடி நிற்கின்றன.

இந்தத் திருப்பணிச் செயற் காலகட்டத்திலேதான் அன்று சுங்க அதிகாரியாகப் பணிபுரிந்த சிவதர்மச் சிந்தனையாளன் சீலத்திரு பொ. வல்லிபுரம் அவர்கள் இந்த ஆலயத்தின் தர்மகர்த்தா எனுந் நிலைக்குக் கொண்டு வரப்பட்டார்கள். பரிபாலன சபையினரின் இந்த அமைப்பு முயற்சி விவேகமானது, காலத்திற்குகந்தது என்று இன்று எல்லோரும் பாராட்டுகின்றனர். இந்த நிலையின் பின் அபிவிருத்திவேலைகள் மிகுந்த சிறப்புடனாகி வளர்ந்தன.

ஆலயத்தின் முன்புறமிருந்த பகுதி, இடப்புற நடைபாதை எல்லாம் மண்டபங்கள் போன்ற அமைதி கண்டன. இடப்புற நுழைவாயில் அழகிய தோரண வாயிலாகியுள்ளது.

அருகே உள்ள தொரு நிலம் இருபது பேர்ச் 1992 ஆம் ஆண்டு இந்து கலாச்சார அமைச்சிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு இந்து கலாச்சார கட்டிட அமைப்பிற்குத் திட்டமிடப்பட்டு நிறைவாக்கப்பட்டுள்ளது. அழகிய கடைத் தொகுதி, கல்யாண மண்டபம், அறநெறிப் பாடசாலை, தெய்வீக கலைக்கூடம், தியான மண்டபம் முதலியனவாக ஐந்து மாடிக் கட்டிடம் வனாளாவி நிமிர்ந்து நிற்கின்றது.

## வழிபாட்டு முறைமைகள்:-

ஆரம்ப காலத்திற் குளிர்ச்சிக் கஞ்சி வைபவம் என்றொரு விழா ஆண்டுக்கொருமுறை நடந்ததுண்டு. குளிர்ந்த உணவுகளை, கனிகளை அன்னைக்கு நிவேதித்து வழிபடுவது அது. அன்னை கோரமானவள்; அவளைச் சாந்தப்படுத்தினால் அம்மை, கொப்புளிப்பான், சின்னமுத்து, கூவைக்கட்டு போன்ற நோய்களினின்றும் தப்பிக் கொள்ளலாம் என்ற எண்ணத்துடனேயே பத்திரகாளியை இவ்வண்ணம் வேண்டினர். இவ்வகை விழா ஆண்டுதோறும் ஆவணியில் இடம பெற்றது. 1918 வரையில் ஸ்ரீ வரதராசப் பெருமாள் ஆலயத்திற் சிவராத்திரி விழா அனுட்டானம் நடைபெறத் தொடங்கியது. 1980 இல் இருந்து பல்வேறு விழாக்களெல்லாம் நடை பெறுகின்றன. இப்பொழுது பிரதோஷம், கார்த்திகை, சதுர்த்தி, பூரம் சிவராத்திரி, நவராத்திரி, திருவெம்பாவை முதலான எல்லா விழாக்களும் சிறப்பாக நடைபெறுகின்றன. வருடாந்த அலங்கார உற்சவம் நிகழ்ந்த ஆடிப்பூரத்தின் மறுதினம் தேர்த்திருவிழா நடைபெறும். மறுதினம் தீர்த் தோற்சவமும் இடம் பெறும்.

அன்னையின் ஆலயம் சிறிதெனினும் அருட்பிரவாகம் பெரியது; எல்லையில்லாதது. என்றும் வேண்டும் இன்ப அன்பு.

# தம்பிரான் தோழர்

சிவ. சண்முகவடிவேல்.

*திருச்சிற்றம்பலம்*

மண்ணுல கிற்பிறந்து நும்மைவாழ்த்தும் வழியடியார்
பொன்னுல கம்பெறுதல்தொண் டனேனின்று கண்டொழிந்தேன்
விண்ணுல கத்தவர்கள் விரும்பவெள்ளை யானையின்மே
லென்னுடல் காட்டுவித்தான் நொடித்தான்மலை உத்தமனே.

(7ம் திருமுறை)

திருமுனைப்பாடி திருநாடு; திருமறையவர் நிறைந்திருப்பது திருநாவலூர். திருமுனைப்பாடி நாட்டில் விளங்குவது திருநாவலூர்.

சடையனார் திருநாவலூரிலுள்ள ஆதிசைவர். அவருடைய குற்றமில் கற்பின் மனைவாழ்க்கை இசைஞானியார். அவர்கள் இருவரும், தீதகன்று உலகம் உய்ய அங்கணர் ஓலைகாட்டி ஆண்டவரைப் பயந்தார்கள். அருமறைச் சைவம் ஓங்க அருளினால் அவதரித்தவருக்கு நம்பி யாரூரர் என்று பெயரிட்டார்கள்.



நரசிங்முனைய ரென்னும் நாடுவாழ் அரசர் கண்டார். நம்பியாரூரர் மீது காதல் கொண்டார். நட்புரிமையால் பயந்தவரிடத்தில் வளர்ப்பு மகனாக வாங்கிக் கொண்டார். அரசிளங் குமரற் கேற்ப அன்பினால் வளர்த்து வந்தார். நாட்கள் நகர நம்பியாரூரர் திருமணப் பருவஞ் சேர்ந்தார்.

மன்னவர் திருவும் தங்கள் வைதிகத் திருவும் சேர்ந்து பொங்கியது. நன்னகர் விழாக் கொண்டது. நம்பியாரூரர் மங்கலம் பொலிய மணவாளக் கோலம் கொண்டார். இயம்பல துவைத்தது. எங்கும் ஏத்தொலி எழுந்தது. மாதர் மகிழ்ந்து பல்லாண்டு பாடினர். திருமணம் எழுந்தது.

மணப்பந்தர் முன்பு மணவாளன் வந்தார். சிவபிரானும் முதுமறை அந்தணராக முன்னே வந்தார். பிரபஞ்சம் என்னும் சேற்றில் ஊன்றாது தடுத்தார். மீளா அடிமையாக ஆட்கொண்டார்.

தம்மைத் தம்பிரான் தடுத்தாட் கொண்ட தன்மையை நினைந்து நினைந்து நெஞ்சம் உருகிப் பின்னர் பாடுவார், நம்பியாரூரர்:" அடி யேனைத்தாம் ஆட்கொண்ட நாட்சபை முன் வன்மைகள் பேசிட வன்றொண்டன் என்பதோர் வாழ்வு தந்தார்."

"வெண்ணெய் நல்லூரில் வைத்தெனை ஆளுங் கொண்டார்...." ஆவணங் காட்டிநல் வெண்ணெயூர் ஆளுங் கொண்டார்."

திருவெண்ணெய் நல்லூரில் திருவருள் வெளிப்பட்டது. திருப்புகழ் விருப்பால் பாடப் பணித்தது.

"…. நமக்கு மன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க அர்ச்சனை பாட்டேயாகு மாதலால் மண்மேனம்மைச் சொற்றமிழ் பாடு கென்றார், தூமறை பாடும் வாயார்."

அன்றிலிருந்து 'இறைகளோ டிசைந்த இன்பம் இன்பத்தோ டிசைந்த வாழ்வில்' தலைப்பட்டார். திருத்துறை யூரில், "அத்தா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே." என்று பாடினார். பரவினார், பத்தி செலுத்தினார்.

திருச்சிற்றம்பலத்தில் சென்று தனிப்பெருங் கூத்தின் வந்தபேரின்ப வெள்ளதுள் திளைத்தார். மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார். முன்னவன் முன்னின்று மொழிந்தான்.

". . . பொன்னி மடுத்தநீள் வண்ணப் பண்ணையாரூரில் வருகநம் பாலென." . . . நல்லருள் வாக்கு வானில் வந்து எழுந்தது.

திருவாரூரை நோக்கி வழிக்கொண்ட நம்பியாரூரர் சீர்காழிப் பதியை வணங்கினர். 'பிள்ளையார் திருவவதா ரஞ்செய்த பெரும்புகலி உள்ளுநான் மிதியேன் என்று ஊரெல்லைப் புறம் நின்று வணங்கினர். "மங்கையிடங் கொள்ளும் மால்விடையார் எதிர் காட்சி கொடுத்தருளினர். மண்டிய பேரன்பினுடன் பேணித் தொழுதார் திருத்தொண்டத் தொகையாளியார்.

'நீராரும் சடைமுடிமேல் நிலவணிந்த பெருமானார், "நாம் அழைக்க அகலா அன்பினோடு ஆருரன் வருகின்றான். அவனை மகிழ்ந்து எதிர்கொள்ளுங்கள்." என்று திருவாரூர் வாழ்வாருக்கு அருளிச் செய்தார்.

நகர் வாழ்வார்கள் நம்பியை எதிர்கொண்டார்கள். ஆலயத்திற்கு அழைத்துச் சென்றார்கள். "தோழமையாக உனக்கு நம்மைத் தந்தோம். "என்னும் அசரீரி வாக்கு வானில் நிகழ்ந்தது. அன்று முதல் அடியார்கள் நம்பியைத் 'தம்பிரான் தோழர்' என அழைத்தார்கள்.

தம்பிரான் தோழர் ஒரு நாள் பார்த்தார் பரவையாரை. சிவனருளாகக் கண்டார். சுந்தரரும் முன்னே வந்து எதிர்தோன்றும் முருகனாகவே பரவையாருக்குப்பட்டது. இருவரும் பண்டை விதி கடை கூட்டப் பார்த்தார்கள். நடு நின்றார் படை மதனார்.

இருவரும் திருமணம் விரும்பி இறைவனிடத்தில் இரந்தார்கள். ஆரூரப்பெருமான், "நாவலர் கோன் மகிழப் பரவையை மணம் செய்து வையுங்கள்" என்று அடியார் அறியும் படியாக அருளிச் செய்தார். அடியவர்கள் திருவருட் பொலிவோடு திருமணத்தை நிகழ்த்தினார்கள்.

நித்தமணாளரை நம்பியாரூரர் மணவாளக் கோலப் பொலிவோடு வணங்க வந்தார். தேவாசிரிய மண்டபத்தில் தனி அடியார்களும் தொகை அடியார்களும் கூடி இருக்கும் கூட்டத்தைக் கண்டார். அத்திருக்கூட்டச் சிறப்பு அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. அடியார்க் கடியன் ஆவேனே' என்ற ஏசறவினோடும் திருக்கோவிலுக்குச் சென்றார். ஆரூர்ப் பெருமான் நம்பியாரூரர் காணக் காட்டும்படியாக எதிர்தோன்றி நின்றார். பாதங்களைப் பணிந்து நின்றார் ஆலாலசுந்தரர்.

"தில்லைவா ழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்." என்று அடி எடுத்துக் கொடுத்து மறைந்தருளினார் எம்பெருமான்.

"தம்பெருமான் கொடுத்த மொழி முதலாகத் தமிழ் மாலைச் செம்பொருளால் தனித்தனி அடியேன் என்று திருத்தொண்டத் தொகையான திருப்பதிகம் பாடினார், சுந்தரர்.

"பரவை பசிவருத்தம் அது நீயும் அறிதியன்றே..." என்று திருப்பதிகம் பாடினார். அதில் குண்டையூர்க் கிழவரின் 'நெல்லிட ஆட்கள் வேண்டி நினைந்து ஏத்தினார். சிவபிரானும் சிவபூதங்களை நெல் ஏற்றிப் பறிக்கும் ஆட்களாக அருளப் பெற்றார்.

பாடும் பணியே பணியாகப் பணிபுரிந்து வந்த பரவை கேள்வர் திருவொற்றியூர்த் திருக்கோவிலிற் சங்கிலியாரைச் சந்தித்தார். பெருமானிடத்தில் விண்ணப்பித்தார். "இங்கு உமக்குத் திருமாலை தொகுத்து என் உள்ளத் தொடை அவிழ்த்த திங்கள் வதனச் சங்கிலியைத் தந்து என் வருத்தம் தீரும்."

"நீ அவளைப் பிரியாமைக்குச் சத்தியம் செய்து கொடு."

"நான் சத்தியம் செய்யும் போது தங்கிடம் மகிழாகக் கொள்ள வேண்டும்.

சங்கிலியார் மகிழ்க்கீழ் சத்தியம் கேட்டார். 'மூவாத திருமகிழை முக்காலும் வலம் வந்து'. உனைப்பிரியேன் என்று சபதம் செய்து கொடுத்தார். திருமணம் நிகழ்ந்தது.

நாள்கள் நகர நம்பியாரூரருக்குத் திருவாரூர்த் திருவிழா கண்முன் தோன்றியது: ...."... மாழை ஒண்கண் பரவையைத்தந்தாண்டானை மதியில்லா ஏழையேன் . . . " எத்தனைநாட் பிரிந்திருக்கேன் என் ஆருர் இறைவனையே... " என்று பாடிப் பாடித்திருவாரூருக்குப் புறப்பட்டார். முன்னடி தோன்றாது கண் மறைய மூர்ச்சித்தார். ஆட்கள் மூலமாகப் பல சிவதலங்களையும் பாடிப் பரவிச் சென்றார்.

திருவெண்பாக்கம் திருத்தலத்தில் இறைவன் ஊன்று கோல் ஒன்று உதவினர். உள்ளே வரவேண்டாம். என்றுரைத்தார். அது கேட்டுக் கசிந்து பாடுவார்:

"மான்திகழுஞ் சங்கிலியைத் தந்துவரு பயன்களெல்லாம்
தோன்ற அருள் செய்தருளித்தாய் என்றுரைக்க உலகமெலாம்
ஈன்றவனே வெண்கோயில் இருந்தா யோஎன்ன
ஊன்றுவதோர் கோல் அருளி உளோம் போகீர் என்றானே"

காஞ்சிப்பதி இறைவன் இடக்கண் கொடுத்தருளினர். திருவாரூர்ப் பெருமான் வலக்கண் கொடுத்தருளினர்.

பரவையார் தமது கேள்வருடைய திருவொற்றியூர் சங்கிலித் தொடக்கை அறிந்திருந்தார். கணவர் மீது கடுங்கோபங் கொண்டிருந்தார். பரவையாரின் கோபத்தை மாற்றச் சிவபிரானைத் தூதுவிட்டார் தம்பிரான் தோழர். சிவபிரான் தூதிற்கு இரங்கினார் பரவையார். கோபம் ஆறினார். நம்பியாரூரர் நங்கை பரவையாரோடு நனி மகிழ்ந்திருந்தார்.

பரவையாரிடத்தில் சிவபிரான் தூது போக அனுப்பிய நம்பியாரூரர் மீது கோபங் கொண்டார் ஏயர்கோன் கலிக்காம நாயனார். சுந்தரரின் முறையீட்டால், இறைவன் சூல நோயைக் கொடுத்துக் கலிக்காமரையும் நம்பியாரூரையும் ஒன்றிணைத்து வைத்தார்.

தில்லைக் கூத்தர் திருவருளாற் சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் காணச் சென்றார் கழறிற்றறிவார் நாயனார். 'என்பு முருக உயிரொன்றி உடம்பு

மொன்றா மென நட்புக் கொண்டார்கள். இருவரும் ஒன்றாகச் சிவதலயாத்திரை செய்தார்கள். சேரமான் பெருமாள் நாயனார் மலைநாட்டிற்குச் செல்லும் போது சேரமான் தோழரையும் அழைத்துச் சென்றார். நம்பியாரூரர் திருவாரூரிற்கு மீணடு வந்தார்.

திருவாரூரில் நம்பியாரூரர் நடமாடி வரும் நாளில் சேரமானின் நினைப்பு எழுந்தது. ஒருநாள் சேரநாட்டை நாடிப் புறப்பட்டார். திருப்புக் கொளியூர் பதியில் அவரிடத்தில் அன்பு செலுத்தும் மறையவனையும் மனைவியையும் கண்டார். அவர்களுடைய புதல்வனை முதலை வாயினின்றும் மீட்டுக் கொடுத்தார். விண்ணிலுள்ளோர் மலர்மாரி பொழிந்தனர். மண்ணிலுள்ளோர் அதிசயித்தனர்.

சுந்தரமூர்த்தி நாயனாரின் வருகையை அறிந்து சேரர் வரவேற்றார். சிந்தை மகிழும் சேரலனாரும் திருவாரூரரும் இரு உடம்பினரானாலும் ஒன்றான தன்மையரானார். அன்போடு தழுவிக் கொண்டார்கள். மலைநாட்டுத் திருக்கோவில்களை வணங்கி அயரா அன்பில் இருவரும் இன்புற்றிருந்தார்கள்.

ஒருநாள் நம்பியாரூரர் திருவஞ்சைத் திருக்கோவிலுக்குச் சென்றார். திருக்கோவிலை வலம் வந்தார் இறைவன் மீது திருப்பதிகம் பாடினார். மீண்டும் திருவாயிலினை வந்து அடைந்த போது மால் அயன் இந்திராதி தேவர்கள் வெள்ளையானையுடன வாயிலினில் காத்து நின்றார்கள். வானநாடர்கள் கயிலைப்பெருமான் அருளிப் பாடு என வணங்கிப் போற்றினார்கள்.

வெள்ளையின் மீது வன்றொண்டர் விண்ணில் எழுந்தருளினர். பஞ்சநாதம் எழுந்தது. பூமழை பொழிந்தது.

சுந்தரரின் நினைப்பால் சேரனார் திருவஞ்னசகளம் ஓடோடி வந்தார். வெள்ளானையின் மீது மெய்த்தொண்டரைக் கண்டார். தாம் வந்தகுதிரையின் செவியில் சிவ மந்திரத்தை ஓதினார். அது விண்ணில் எழுந்து பாய்ந்தது. வெள்ளானை முன் சேவித்துச் சென்றது. சேனாவீரர்களும் வீரயாக்கை பெற்று சேவகம் புரிந்து வந்தார்கள்.

யானையின் மேல் செல்லும் பொழுதில், 'தானெனும் தமிழ் மாலை சாத்தினார் தம்பிரான் தோழர்.

திருவணுக்கன் திருவாயிலில் தடையுண்டு நின்றார். சேரலனார். திருநாவலூராளியார் அண்ணலார் முன்பு நண்ணினார்.

'ஊரனே வந்தனை' என்று உலகுய்ய உரைத் தருளினர் உமைபாகர்.

வன்றொண்டர் பரம்பரையானந்த வடிவு நின்றது போன்று இன்ப வெள்ளத்து மலர்ந்தனர்.

இறை அருளால் திருநந்தி தேவர் சேரரை அழைத்து வந்தார். "நாம் அழையாம் இங்கு எய்தலாமோ? " என்றார் கைலாசபதி." தேவரீரின் கருணைத்திரை செய் வெள்ளம் கொடு வருதலின் திருமுன்பு வரப் பெற்றேன். "என்றார் சேரர்.

சேரர் தாம்பாடிய திருவுலாப்புறம் அரங்கேற்றினர். வன்றொண்டர் ஆலாலசுந்தரர் ஆனார். தம்பணி நின்றார். சேரர் கணநாதரானார். மலையரசன் மகளார் கோவிலில் தம்பணி தலை நின்றார் – பரவையார், சங்கியார் – கமலினி அனிந்திதையராக.

வருணனதேவன் வன்றொண்டரின் வான் திருப்பதிகத்தைத் திருவஞ்சைக் களத்தில் சேர்ந்தான்.

திருக்கைலாச ஞானவுலாவை ஐயனார் பெருமான் திருப்பிடவூரில் வெளிப்படுத்தினர்.

# முதலை உண்ட பாலனை வரவழைத்தது

வித்துவான் வ. செல்லையா

சுந்தரமூர்த்தி நாயனார் சேரமான் பெருமாணாயனாரை நினைந்து, அவரிடம் செல்லுதற்குக் கருதினார். அதனை முன்னிட்டுச் சோழ மண்டலத்தைக் கடந்து கொங்கு தேசத்தை அடைந்தார். அதனூடே திருப்புக்கொளியூரிற் சென்று கொண்டிருந்தார். அங்கே ஒரு வீதியிலே இரண்டு வீடுகளில் ஒன்றிலே மங்கல ஒலியும் மற்றொன்றிலே அழுகை ஒலியும் கேட்டன. சுந்தரமூர்த்தி நாயனார் அங்கிருந்த பிராமணர்களிடம் இவ் இரண்டொலியும் ஒருங்கே நிகழ்வதற்குரிய காரணம் என்ன? என்று வினாவினார். அப்பிராமணர்கள் சுவாமியை வணங்கி ஐந்து வயதுடைய இரண்டு புதல்வர்கள் குளத்திலே குளித்த பொழுது ஒருவனை முதலை விழுங்கி விட்டது. மற்றப் புதல்வன் தப்பித்துக் கொண்டான். தப்பிய புதல்வனுக்கு இன்று உபநயனஞ் செய்கிறார்கள் அதனால் அவ்வீட்டில் மங்கல ஒலி கேட்கிறது. முதலை உண்டவன் இன்றிருந்தால் அவனுக்கும் உபநயனச் சடங்கு நடந்திருக்கும். அவன் இறந்தமையை நினைந்து அவ்வீட்டில் அழுகைச் சத்தம் கேட்கிறது; என்று கூறினார்கள்.

இவ்வார்த்தைகளைக் கேட்டுத் திருவுள மிரங்கி நின்ற சுந்தரமூர்த்தி நாயனாரைப், புதல்வனை இழந்த பிராமணனும் மனைவியுங் கண்டு ஓடிவந்து, முகமலர்சியோடு அவரின் திருவடிகளிலே வீழ்ந்து வணங்கினார்கள். சுந்தரமூர்த்தி நாயனார் அவர்களை நோக்கிப், புதல்வனை இழந்தவர்கள் நீங்களா? என்று கேட்டருளினார். அவர்கள் சுவாமிகளைப் பின்னும் வணங்கி, சுவாமீ, அது முன்னே நிகழ்ந்தது. அது நிற்க, அடியேங்கள் தேவரீரை வணங்குவதற்கு நெடுங்காலமாக ஆசையுற்றிருந்தோம். அவ்வன்பு பழுதுபோகாமல் தேவரீர் இங்கு எழுந்தருளப் பெற்றீர்கள் என்று விண்ணப்பஞ் செய்து நின்றார்கள். அதனைக் கேட்ட நாயனார், இந்தப் பிராமணனும் மனைவியும் தம்பிள்ளையை இழந்த துன்பத்தையும் மறந்து, நாம் வந்ததற்காக மனம் மகிழ்கிறார்கள். அடியார்களைப் பேணிவாழும் இவர்களின் மனக்குறையை நீக்கி, அப் புதல்வனை முதலைவாயினின்றும் அழைத்துக் கொடுத்து, அப்பெற்றாரை மகிழச்செய்ய வேண்டுமென்று திருவுளங்கொண்டு, அவிநாசியில் வீற்றிருக்கும் கடவுளை வணங்குவோம் என்று அருளிச் செய்தார். பின்பு அந்தப் புதல்வனை முதலை உண்ட வாவி எங்கே உள்ளது? என்று வினாவி அதன் கரைக்கு எழுந்தருளினார்.

சுந்தரமூர்த்தி நாயனார் குளக்கரையை அடைந்து அவிநாசிப் பெருமானைத் தியானித்துக் கொண்டு தேவராத் திருப்பதிகத்தைப் பாடத் தொடங்கினார். "உரைப்பாருரையுகந் துள்கவல் லார் தங்களுச்சியாயரைக்காடரவா வாதியு மந்த முமாயினாய் - புரைக்காடு சோலைப்புக் கொளியூ ரவிநாசியே - கரைக்கான் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே." என்னும் நான்காந் திருப்பாட்டு முடிவதற்கு முன், இயமன் அந்தப் புதல்வனது உயிரைக் கொண்டு வந்து, அந்த வாவியிலுள்ள முதலையின் வயிற்றினுள் புகுத்தி அத்தனை ஆண்டுள தேகவளர்ச்சியையும் அடையத் தக்கதாகச் செய்தனன். உடனே அந்த முதலை கரையிலே வந்து புதல்வனை அன்றுள்ள வயதுக்குள்ள தோற்றத்துடன் உமிழ்ந்து விட்டது. அப்பொழுது பிள்ளையைப் பெற்ற தாயானவர்

விரைந்து ஓடிப் போய்ப் பிள்ளையை அள்ளியெடுத்து வந்து தன் கணவனுடன் சுந்தரமூர்த்தி நாயனாரின் திருவடிகளை வணங்கினார். இவ்வற்புதத்தைக் கண்ட தேவர்கள் ஆகாயத்தின்றும் நாயனார் மீது மலர்மாரி பொழிந்தனர். அங்குள்ள பிராமணர்கள் எல்லாம் அற்புதம்! அற்புதம்! என்று சொல்லித் தங்கள் உத்தரீயங்களை ஆகாயத்தில் வீசி ஆரவாரங் கொண்டார்கள்.

சுந்தரமூர்த்தி நாயனார் அந்தப் புதல்வனையும் அழைத்துக் கொண்டு அவிநாசிக்குச் சென்று, சுவாமி தரிசனம் செய்து திருப்பதிகம் பாடியருளினார். பின்பு அப்புதல்வனையும் அவனது பெற்றார் உறவினர் அனைவரையும் அழைத்துக் கொண்டு அவனது இல்லம் சென்று அவனுக்கு அந்நன்னாளிலே உபநயனமும் செய்வித்து வைத்தார். அவ்வற்புதத் தேவாரத்தினைப் படிப்போம்.

*திருச்சிற்றம்பலம்*

எற்றான் மறக்கே னெழுமைக்கு மெம்பெருமானையே
உற்றாயென் றுன்னையே யுள்கின் றேனுணர்ந்துள்ளத்தால்
புற்றாடரவா புக்கொளி யூரவி நாசியே.
பற்றாக வாழ்வேன் பசுபதியே பர மேட்டியோ.

உரைப்பா ருரையுகந் துள்கவல் லார்தங்க ளுச்சியாய்
அரைக்கா டரவா வாதியு மந்தமு மாயினாய்
புரைக்காடு சோலைப் புக்கொளி யூரவி நாசியே.
கரைக்கான் முதலையைப் பிள்ளைதரச் சொல்லு காலனையே.

*திருச்சிற்றம்பலம்*

(சுந்தரமூர்த்தி நாயனார்)

## நினைவிற் கொள்வதற்கு

| | | | | |
|---|---|---|---|---|
| ஆவணி | 1. | 17.08.98 | திங்கள் | மாதப்பிறப்பு விஷ்ணு பதிபுண்ணிய காலம் காலை 6.41 முதல் 1.09 வரை |
| | 2. | 18.08.98 | செவ்வாய் | ஏகாதசி விரதம் |
| | 3. | 19.08.98 | புதன் | பிரதோஷ விரதம் |
| | 5. | 21.08.98 | வெள்ளி | புகழ்த்துணையார் குருபூசை, அதிபத்தர் குருபூசை, அமாவாசை விரதம் |
| | 6. | 22.08.98 | சனி | இளையான் குடிமாறர் குருபூசை |
| | 7. | 23.08.98. | ஞாயிறு | ஆவணி ஞாயிறு |
| | 8. | 24.08.98 | திங்கள் | மறை ஞானசம்பந்தர் குருபூசை |
| | 9. | 25.08.98 | செவ்வாய் | விநாயக சதுர்த்தி விரதம் |
| | 11. | 27.08.98 | வியாழன் | ரிஷி பஞ்சமி |
| | 12. | 28.08.98 | வெள்ளி | ஷஷ்டி விரதம் |
| | 13. | 30.08.98 | ஞாயிறு | ஆவணி ஞாயிறு சூலச்சிறையார் குருபூசை |
| | 16. | 1.09.98 | செவ்வாய் | ஆவணி மூலம், குங்கிலியக் கலயர் குருபூசை |
| | 17. | 2.09.98 | புதன் | பரிவர்த்தன ஏகாதசி விரதம் |
| | 19. | 4.09.98 | வெள்ளி | பிரதோஷ விரதம் |
| | 20. | 5.09.98 | சனி | நடேசரபிஷேகம் அனந்த விரதம் |
| | 21. | 6.09.98 | ஞாயிறு | பூரணை விரதம், உமாமகேஸ்வர விரதம் , ஆவணி ஞாயிறு |
| | 22. | 7.09.98 | திங்கள் | மஹாளய பக்ஷாரம்பம் |
| | 24. | 9.09.98 | புதன் | சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| | 25. | 10.09.98 | வியாழன் | மஹாபரணி |
| | 26. | 11.09.98 | வெள்ளி | கார்த்திகை விரதம் |
| | 27. | 12.09.98 | சனி | ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி |
| | 28. | 13.09.98 | ஞாயிறு | ஆவணி ஞாயிறு |
| | 31, | 16.09.98 | புதன் | ஏகாதசி விரதம், செருத்துணையார் குருபூசை |

# காம்பினொடுநேத்திரங்கள்

- முருக வே. பரமநாதன் -

இறைவன் பிச்சாடனராய், திகரம்பர நிலையில் வெட்கம், மானம், வஞ்சகமின்றிப் போனகாட்சியை அழகான திருமேனிகளாக வடித்துள்ளனர். அதிலும் பல கோலங்கள் உண்டு. இந்தப் பிச்சைத்தேவரைப் பாடாத பக்தி இலக்கியங்களே இல்லை. ஒன்றுமில்லாத ஒருவனிடம் நாம் கேட்பது சரி யென்றால் நிறையக் கிடைக்கிறது. இறைவனோடு தோழமை பூண்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் உரிமையோடு என்னென்னவோ கேட்டார். அதற்கு முன் அவன் பொன்மையைப் பாடினார்.

பொன்னவன் பொன்னவன் பொன்னைத்தந்து
என்னைப் போகவிடா
மின்னவன் மின்னவன் வேதத்தின்
உட் பொருளாகிய
அன்னவன் அன்னவன் ஆமாத்தூர்
ஐயனை ஆர்வத்தால்
என்னவன் என்னவன் என்மனத்து
இன்புற்று இருப்பனே 7 : 45 – 8

சகல செல்வங்களும் உடையவனும், பொன்னைத்தந்து என்னைப் போகவிடாத மின்னல் போலப் பேரொளி உடையவனும், வேதத்தின் உட்பொருளாந் தன்மையுடையவனும் ஆன ஆமாத்தூரில் இருந்து அருள்பாலிக்கும் அழகனை அன்பினால் நான் எனக்குரியவன், எனக்கு உரியவன் என்று எண்ணி என் மனத்தில் எப்போதும் இன்பம் பெற்று இருப்பேன் என்று பேசும் ஆருரரின் உரிமைப்பாடு எவ்வளவு உயர்ந்தது, தனித்துவமானது. எனவே எம்பெருமானின் கொடைத்திறனை மறக்க முடியாமல் மேலும் தொடர்கிறார்.

"பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானை
பின்னை என் பிழையைப் பொறுப்பானைப்
பிழை யெலாந்தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையன் என்றறிய வொண்ணா
எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயற் பழனித்தணி
ஆரூரனை மறக்கலும் ஆமே. 7 : 59:1

உலகியலுடன் உயர்ந்த உயிரியல் வாழ்வுமளிக்கும் இறைவனிடம், பட்டு, வாசனைப் பொருள் பொன்முத்து மணிமாலை எல்லாம் கேட்டார். மனமகிழ்ச்சியோடு வாழ்வதற்கு. மனிதன் சீரும் சிறப்புமாய் வாழ வேண்டும். கண்ணன் கூடப்பட்டும் பீதாம் பரதாரியாகக் காட்சிதருகிறான். மற்றவர்கள் நம்மைக் கண்டு இகழாமல் இருக்க வாசனைத் திரவியங்கள் போடுவது அணிவோர்க்கும், பக்கத்திருப் போர்க்கும் இதமும், மனோரம்மியமும் அளிக்கிறது.

செல்வத்தை மறைத்து வைத்தீர் எனக் கொரு கால் இரங்கீர்
முத்தாரம் இலங்கிமிளிர் மணி வயிரக் கோவை

சுருக்கமாகவுள்ள சுந்தரரின் திருத்தொண்டத் தொகைக்கும் நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதிக்கும் சேக்கிழார் பொருள் விரித்து நாயன்மார் அறுபத்து மூவரின் வரலாறுகளையும் கதை போலச் சுவைபடச் சொன்னார்.

- எஸ். கே. சாமி.

அவை பூணத்தந்தருளி மெய்க்கினிதா நானும்
கத்தூரி கமிழ் சாந்தும் பணித்ருள வேண்டும் 7:46:1
தொண்டாடித் திரிவேனைத் தொழும்பு தலைக் கேற்றும்
சுந்தரனே கந்தமுதல் ஆடை ஆபரணம்
பண்டாரத்தே எனக்குப் பணித்தருள வேண்டும்

மேலது : 5

பல அகம்புக்கு உழிதர்வீர் பட்டோடு சாந்தம்
பணித்ருளுளாது இருக்கின்ற பரி சென்ன படிறோ

மேலது :6

தோற்றமிகு முக் கூற்றில் ஒரு கூறு வேண்டும்
தாரீரேல் ஒரு பொழுதும் அடி யெடுக்க லொட்டேன்

முக் கூறு: இறைவனுக் கொரு கூறு, இறைவிக்கு ஒரு கூறு, அடியவர்க்கு ஒரு கூறு

காற்றனையகடும் பரிமா ஏறுவதும் வேண்டும்

மேலது : 8

பொற்சுரிகை மேலோர் பொற் பூவும் பட்டிகையும்
பணித்தருள வேண்டும்

மேலது : 10

ஒளி முத்தம் பூணாரம் ஒண்பட்டும் பூவும்
கண்மயத்த கத்தூரி கமழ் சாந்தும் வேண்டும்

மேலது : 11

இவ்வாறு ஒரு பட்டியலே போடும் ஆரூரர் அடிகள் இரண்டாவது பாடலிலே பட்டைப் பற்றிப் பேசுகின்றார். காசிப்பட்டு, தர்மாவரம் பட்டு, சேலம் பட்டு, பெங்களூர்ப்பட்டு, காஸ்மீரம்பட்டு காஞ்சீபுரம் பட்டு பிரபல்யமானவை. இப் பாடலில் வரும் காம்பு, நேத்திரம் என்பன பட்டாடை வகை இனத்தைக் குறிப்பதாக வித்துவான்நாராயண வேலுப்பிள்ளையவர்கள்உரை கண்டுள்ளார்கள்.

வேம்பினொடு தீங்கரும்பு விரவி எனைத் தீற்றி
விருத்திநான் உமைவேண்டத் துருத்திபுக்கு
அங்கு இருந்தீர்.

பாம்பினொடு படர்சடைகள் அவைகாட்டி வெருட்டிப்
பகட்ட நான் ஒட்டுவனோ பலகாலும் உழன்றேன்
சேம்பினொடு செங்கழுநீர் தண்கிடங்கில் திகழும்
திருவாரூர் புக்கிருந்த தீவண்ணர் நீரே
காம்பினொடு நேத்திரங்கள் பணித்தருள வேண்டும்
கடல் நாகைக் காரோணம் மேவியிருந்தீரே

*உடுத்தாரை உண்டி வினவு*

*468 ஏழாந்திருமுறை*

*வார் இல்– என்பது பழ மொழி நானூறு வாக்கு*

# ஆலந்தான் அமுதாக்கிய அண்ணலின் அருணலம்

- பண்டிதர். ச. சுப்பிரமணியம்

பரமகருணாநிதியாகிய பரமேஸ்வரனது பேரருளின் திறம் பேசொணாதது. எனினும் பக்தர்கள் ஆராஅன்பால் அமுதூறப் பலவாறு போற்றுவர். தேவாசுரர் சிவாஞ்ஞை பெறாது ஆணவமுனைப்போடு பாற்கடலைக் கடைந்து அமுதம் பெற முயன்றனர். முதலிலே மத்துக் கடலிலே அமிழ்ந்தியது. விஷ்ணுதேவர் ஆமையாகிமத்தைச் சுமந்து தாழாது காத்தார். பின் ஆலகாலவிடம் எழுந்தது. எவராலும் தாங்க முடியாத வெம்மை; அதனாலே தேவாசுரர் அஞ்சி ஓடினர். விஷ்ணு சற்று நேரம் தடுத்து நின்றார். அவரது செம்பவள மேனியும் தாங்காது கருகிவிட்டது. எல்லாரும் ஓடிச் சென்று கயிலாயநாதனின் சரணமே சரணம் என அடைந்தனர். தம்குறையை முறையிட்டனர். பெருமான் கருணைகூர்ந்து ஆலாலசுந்தரர் மூலம் ஆலத்தை அடக்கிப் பிடித்துக் கொணரச் செய்து கையேற்றார். பின் அதனை என் செய்வதென அமரரை வினாவினர். தேவர்கள், 'சுவாமியே அதனை உண்டு எம்மைக் காத்தருள்க' என வேண்டினர். பெருமான் வாயிலிட்டு விழுங்கும் போது அது மிடற்றிலே நீலமணிபோல மிளிர்ந்தது. விண்ணவர் "சுவாமீ நீர் இன்று எம்மைக் காத்த கருணையை நினைவு கூர்ந்து நாம் வணங்கும்படி அவ்விடத்தை இம்மிடற்றிலே நிறுத்தியருளுக" என வேண்டினர். பெருமானும் அங்ஙனமே நிறுத்தியருளினார். உண்டு வயிற்றினுள்ளே புகவும் விட்டிலர். உமிழ்ந்து வெளியிலே செல்லவும் விட்டிலர்.

அதனால் "சொன்னவாறறிவார்" என ஒருதிருநாமமும் பெருமானுக்கு உளதாயிற்று. இப்பேரருளின் வெற்றியை நினைந்து திருநீலகண்டர், ஸ்ரீ கண்டர், சிதிகண்டர், காளகண்டர் எனப் பற்பல நாமங்களாற் சிவனைப் போற்றுவர்.

இச்செயலின் அருமைபெருமையை பாராட்டும் வகையில் சிவானந்தலகரியில் ஆதிசங்கரர் கூறுகின்றார் பெருங்கருணைத்திறம்:-

"எத்துணைநின் இரக்கம் அதற் (கு) இது சாலாதோ?
எம்மானே! பசுபதியே! இனியோய்! ஈசா!
உத்தம! நின் உதரமுறும் உயிரும் உப்பால்
உலகிலுறு சராசரமும் ஓம்பு மாறும்,
கொத்தமரர், குலைந்தோடா மருந்தாமாறும்,
கொதித்(து) அஞ்ச அனல்வீசும் கொடிய நஞ்சை
அத்த! அருந்தினையல்லை, உமிழ்ந்தா யல்லை;
அடக்கினையே மிடற்றுமணி அணியாமாறே."

பொருள்: எம்பெருமானே, ஆன்ம நாயகனே, எமக்கினியவனே, அனைத்துக்கும் ஈசுவரனே, உத்தமோத்தமனே 'உனது மிகப் பெரிய இரக்கமுடைமைக்கு நினது இச்செய லொன்றே சான்றாகாதோ? வேறு சான்றுகளும் வேண்டுமோ? சர்வசீவதயாபரனே! வீடடைந்த காரணத்தாற் பிறப்பொழிந்து நின் திருவயிற்றில் அடங்கியுள்ள ஆன்ம கோடிகளை அழியாது பாதுகாக்க வேண்டியது கடனாதலாலும், அப்பாலே பாசபந்தத்தால் உலகுதோறும் பிறந்து வாழும் உயிர்க் குலத்தைக் காக்க வேண்டியதும் கடனே ஆதலாலும்,

கொத்தடியராய்த் திருமுன் சேர்ந்த தேவாசுரர்கள் அஞ்சி அலமந்து ஓடாமல் ஓம்ப வேண்டியதும் தலையாய கடப்பாடே ஆதலாலும். யாவரும் அஞ்சும் வண்ணம் சீற்றங்கொண்டு எழுந்து வரும் ஊழித்தீபோல வெப்பம் மிகுந்த கொடிய ஆலகாலத்தை எந்தந்தையே உண்டு வயிற்றுட் புகவும் விட்டிலீர். வெளியிலே செல்லும்படி உமிழ்ந்து விட்டிருமில்லை; எம் வேண்டுதலின் வண்ணமே உமது திருமிடற்றிலேயே அடங்கி நிற்கும் படி அருள் செய்தீரே. நும்கருணை இருந்தவாற்றை என் சொல்வோம்.

### பரமேஸ்வரனின் வரம்பிலாற்றல்

சிவனே! மிகக் கொடிய இந்நஞ்சினை யாதென நினைந்தீரோ கையில் வாங்கி வைத்துக் கண்ணாலே பார்த்து நாவிலே இட்டு மிடற்றிலும் அடக்கிவைத்து மகிழ்தீரே, பெருமானே! உமது வரம்பிலா ஆற்றலை என் சொல்வோம்.!

ஸ்ரீ ஆதி சங்கரர்

"ஐயா! வெஞ் சுவாலையுடன் இமையோர் அஞ்ச
அடைவிடம் எங்ஙனம் பார்த்தாய் ஆடிதானே?
மெய்யா! உன்கைக் கொண்டாய் மிசையும் நாவல்
மென்கனியோ? நாமீதும் சுவைத்தாய் சித்தி
பொய்யாத ரசமருந்தோ? புணரி ஈன்ற
பூஷணமாம் மணிதர்னோ கழுத்திற் பூண்டாய்?
கையாலே கனல் தாங்கும் கருணைவாழ்வே!
கடவுளே! உண்மையினைக் கழறுவாயே."

பொருள் : தந்தையும் தலைவனுமாக உள்ளவனே, மெய்ப்பொருளாய் உள்ளவனே, திருகரத்திலே அக்கினியைத் தாங்கிய கருணைக்கு வாழ்விடமானவனே, கடவுளே, எனது ஐயத்தைத் தீர்க்க விடை கூறுவீராக.

ஐயம், தேவர்களும் அஞ்சுமாறு கொடிய தீச்சுவாலை போல வெம்மைமிக்கு எழுந்து வந்த நஞ்சை எம் கண்களாலே பார்க்கவும் முடியவில்லை. ஆனால் நீரோ அதனை நன்கு நோக்கினீர்! அதனை அழகுபார்க்கும் கண்ணாடியாக நினைந்தீரோ? சொல்லும்; அதனை உமது திருக்கரத்திலும் எடுத்து வைத்திருந்தீரே! உண்ணும் பக்குவமான மென்மையுள்ள நாவற்கனியாக எண்ணினீரோ? அதனைத் திருநாவிலும் வைத்துச்சுவை தேர்ந்தீரே! சித்தர்கள் எண்ணிய சித்திகளைத் தவறாது தரவல்லதாக அமைத்த இரசமருந்துக் குளிகை எனக் கருதினீரோ?

அது சமுத்திரத்திலே பெற்றுக் கொண்டதாய் மாந்தர் தேடிப் பெற்று அணியும் நீலரத்தினமாக நினைந்தீரோ? உமது திருக்கழுதிலே சிறந்த ஆபரம் போல விளங்க உண்மையையாம் உணரும்படி உரைப்பீராக.

தாம் கண்களை இழப்பதை எண்ணாதே கண்ணை அகழ்ந்து காளத்தியப்பருக்கு கண்ணிலே சார்த்திய திண்ணனார் செயலும் கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை என்ற மணி வாக்கும் இங்கு எண்ணத்தகும்.

இவ்வாறான பெருங் கருணை தாயிடமே காணலாகும் அதனாலே தான் "தாயினும் நல்ல தலைவர்" எனச் சம்பந்தரும் "என்னிலும் எனக்கினியான் ஒருவன்" என அப்பரும் "அன்னே உன்னை" எனச் சுந்தரும்" அம்மையே அப்பா" என மணிவாசகரும் போற்றுவர்.

# செந்தமிழ்ச் சைவச் சிந்தனைச் செல்வர்களுக்கு

- பண்தர் மு. கந்தையா-

எங்கள் சமயம் சனாதன (என்றுமுள்ள) சைவம். எங்கள் நாடு சைவ நாடு. அந்நியர் ஆட்சிப் பலாத்காரத்தினால் நமது சனாதன சைவ நிலைக்கு அச்சுறுத்தல் தோன்றிய மிகச்சமீப காலத்தில் தெய்வாதீனமாகச் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான்தோன்றி இது சைவ நாடென்றே மீள்பிரதீட்டை பண்ணி வைத்த விசேட சிறப்போடு கூடிய சைவநாடு எம்நாடு. 1906ல் சேர். பொன் இராமநாதன் அவர்கள் அமெரிக்கா சென்ற கப்பலில் அவரைச் சந்தித்து உரையாடிய அமெரிக்கர் ஒருவர் சேர், நீங்கள் இந்து சமயத்தவரா? என்று கேட்டாராம். அதற்கு நேரிற் பதிலளித்த இராமநாதன் "நாங்கள் சிவனை வழிபடுபவர்கள், எங்கள் சமயம் சைவம். ஆனாற் பிறநாட்டார் எங்களை இந்துக்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். அதற்காக நாங்கள் இந்து சமயத்தவர் என்ற பெயர்க்குரியவர் ஆகமாட்டோம்" என்றாராம். திருமதி லீலாவதி இராமநாதன் Western pictures to the eastern students என்ற பெரில் எழுதிய நூலில் இன்றுங்காண உள்ள செய்தி இது.

இத்தொடர்பில் இந்து என்ற பெயர் புறநாட்டாரால் தோன்றி இந்து சமயமாகப் பரிணமித்த வரலாறுங் காணத்தகும். பழைய காலத்தில் இந்திய தேசத்தோடு தொடர்பு பெற்றிருந்த பாரசிக நாட்டினர் இந்திய மக்கள், சமயம், கலாசாரம் என்பவற்றைக் குறிப்பதற்கு இந்தியாவின் மேற்குக் கரையோரத்திலிருந்து அப்பாலுள்ள நாட்டினர் எல்லாராலும் நன்கறியப்பட்டிருந்த சிந்து (நதிப்பெயர்) என்ற சொல்லைக் கையாண்டனர். அவர்கள் மொழியியல்பு "சி" ஒலிக்கு இடங்கொடாமையால் ஹிந்து என வழங்குவாராயினர். பாரசீக மொழியிலேயே இந்து என்ற சொல் வழக்கில் இருத்தல் சார்பான ஊகம் இது. அது நெடுங்காலம் அவர்கள் அளவிலேயே இருந்துள்ளது. இந்திய நாட்டவர் அவ்வழக்கைக் கையாண்டமைக்கு இந்திய மொழி அகராதிகளில் அத்தாட்சியில்லை என்பர். சுமார் ஆயிரவருடங்களுக்கு முன்பாக இந்தியாவில் வேதாந்த ஞான உத்தாபகராகத் தோன்றிய பிரமுகர் ஒருவர் "ஷண்மதம்" என்ற பெயரில் ஒரு நூதன சமயவகுப்பாக்கம் செய்து வைத்தார். அவர் மரபினர் அவரைச் "ஷண்மத ஸ்தாபகர்" எனக் கொண்டாடுவதே அதற்கத்தாட்சியாம். அவர் தமது

**எங்கள் முழுமுதற் கடவுள் சிவன்.**

**சிவனை வழிபடும் எங்கள் சமயம்**

**சைவம்**

வேதாந்த ஞான மேன்மையை நிலை நிறுத்த அதற்கிடைஞ்சலாயிருந்த சாதன சைவ மேன்மையை அதாவது அதன் முதன்மைப் பிரபாலத்தை மட்டந்தட்ட வேண்டும். உள்நோக்கில் அது செய்துள்ளமை பகிரங்க இரகசியம். ஸ்ரீமான் காசிவாசி செந்திநாதையர் அவர்களின் பத்தாண்டு கால ஆராய்ச்சி முடிவுகளாக வெளிவந்து இன்னமும் எவராலும் மறுக்கப்படாதிருக்கும் நூற்கருத்துக்கள் இவ்வாறு கருத வைக்கின்றன. சைவத்துக்கெனத் தனி முதன்மை என ஒன்றில்லை. அம் முதன்மை உள்ளன வேறும் ஐந்துள, என்ற ரீதியில் அவர் வகுத்தியற்றிய சாக்தம், கௌமாரம், காணபத்தியம், வைஷ்ணவம், சௌரம் என்ற ஐந்துடன் ஆறாவதாகச் சைவமும் அடங்க வைக்கப்பட்டாயிற்று. அவ்வாறனையும் ஒரு பொதுக் குறியீட்டுட் புகுத்த வாய்ப்பாகப் பாரசீகச் சொல்லான ஹிந்துவைச் சமயம் என்ற பெயருக்கு அடைமொழியாக்கி, ஹிந்து சமயம் என்ற பெயரை அவரோ அவர் வழிமரபினரோ உருவாக்கியுள்ளனர். சென்ற நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் அமெரிக்கப் பிரசங்கத்துச் சென்ற சுவாமி விவேகானந்தர் இந்திய வைதீக சமயங்களைக் குறிக்க அப்பெயரையே மீளமீள ஒலித்ததினால் அது அகில மறிந்த பெயருமாயிற்று.

இவ்வெல்லாமாகியும் சநாதன சைவத்துக் குரியார் சைவம் என்ற புராதனமான தம் வழக்கில் தளர்ந்திலர். "அவர்கள் வகுத்த பெயர் அவர்களோடு" என்ற அளவில் அதைத் தாம் எட்டங்கட்டி வைத்திருந்தனர். குறித்த காலப் பகுதிக்கும் பின் எழுந்த சைவநூல்களிலோ, சைவப்பிரமுகர் வாக்கினிலோ அப்பெயர் தழுவப்பட்டதற்கு எந்தவோர் சான்றுங் கிடையாது. பிறசொல் எதனாலும் சுட்டியுணரப்படுவதற்குரிய பொருள்வளமும் அனுபவவளமும் சிவம், சைவம், என்ற சொற்களுக்கு உளவாயிருந்தமையே அதற்கு ஏகப்பட்ட காரணமென்பதற்கு அத்தாட்சிகளும் பல. 'சிவனெனும் ஓசையல்லாது அறையோ உலகில் திருநின்ற செம்மையுளதோ' – திருநாவுக்கரசு சுவாமிகள். சிவன் என்ற ஓசைக்கல்லது மற்றெவ்வோ சைக்காயினும், திருநின்ற செம்மையுள்ளதா? சபதம் பிடிக்கவா? (அறையோ) என்கின்றது இவ்வருளிச் செயல். சண்டாளனாயினும் 'சிவ' என்று உச்சரிக்கக் காணில் அவனோடு பேசுக, அவனோடுண்க, அவனோடுறைக என்பது உபநிடத வாக்கியம். அது பின்னால் உபநிடதப்பத்தியிலிருந்து விரட்டப்பட்டு விட்டமை செந்திநாதையர் ஆராய்ச்சித்துணிபுகளில் ஒன்று. இவ்வகையிற் பல. விரிக்கிற் பெருகும். இவ்வருமையுணர்ந்த ஆன்றோர் வாயிலோ எழுத்திலோ சமீபத்தில் மறைந்த பண்டிதமணி வரை இந்து சமயப் பெயர் எழுந்தொலித்திருக்காமை கண்கூடு. இருந்தும் இப்போ சில வருடங்களாகச் சான்றோரல்லாதோர் வாயிலாக அப்பெயர் வழக்கு Illicit Immigrant மாதிரி, சைவ சமூகத்திற் பிரவேசித்ததும் வகை அறியார்வரிசை அறியாராம் சைவர் சிலர் தங்கள் சைவ ஸ்தாபனங்களுக்கு அப் பெயரைச் சூட்டிக் கொள்ளவுந் தவறிற்றிலர்.

இம் மடமையைக் கண்ணுற்று அயல் மதத்தார் நம்மை நோக்கிக் கிண்டல் பண்ணும் படியாகிறது நிலைமை. இரண்டு மூன்று மாதங்களுக்கு முன் நம் நாட்டுப் பத்திரிகையொன்றில் அதன் தலை காட்டிற்று. இந்து சமயம் என்றால் என்ன? அதற்குச் சாஸ்திரம் என்ன?....... இத்தியாதி. அதன்வடிவம் விடுவேனோ பார்: என்ற மாதிரி இந்துப் பேரிலான நம்நாட்டு அவை ஒன்று தன் மாத வெளியீடாகிய அப்பெயர்த்தர்மம் 15 பக் . 373 இல் பேட்டி ஒன்று பிரசுரிப்பதாயிற்று.

ஷண்மதத்தில் உள்ள சைவம் எதுவோ அதுவே நமது சைவம்; ஷண்மதத்தில் உள்ள மற்ற ஐந்தும் சைவத்தின் பலப்பேற்றுக்கு உபகரிப்பன. ஆதலால், சைவர் முழுவதாக வாழும் பகுதியில் இந்துப் பேரவை இருப்பதில் எந்த ஆட்சேபத்துக்குமிடமில்லை என்பது விடைகாரர் மழுப்பல். சநாதன சைவர் இதை விசாரிப்பதில் விந்தை ஏதுமில்லை.

மற்றைய ஐந்தில் ஏனைய மூன்றும் ஏதோ நாம் மாத்திரையாக சாக்தமும் வைணவமும் தான் பிரசித்தமான சமயங்களாயுள்ளவை. அவையிரண்டும் முறையே சக்தியையும் விஷ்ணுவையும் பரம்பொருளாகப் போற்றுபவை. தத்தமக்கென ஆகமங்களையும் தீஷை முறைகளையும் வேறு வேறாகக் கொண்டுள்ளவை. தத்தமக்கான முத்தி பற்றிய வேறு வேறிலக்கணங்களையும் உட் கொண்டவை. சிவாகம அநுசரணையிலுள்ள சநாதன சைவத்தின் கிரியை வழிபாட்டுக்கும் தத்துவ ஆய்வுக்கும் ஒரே இலட்சியமாயுள்ள மெய்ஞ்ஞானப் பேறு அவற்றின் இலட்சியமாகாது. (அது தான் எனச் சும்மா சொல்லுவார்கள். நிரூபிக்க நில்லாது) பொதுவில் இம்மையிலுஞ் சரி அம்மையிலுஞ்சரி சுகபோக அதிகாரப் பேறுகளே அவற்றின் விருப்பப்படியான இலக்குகள். அவற்றுள் பலப்பேற்று அவா மிகுதி கொண்ட சாக்தம் இயல்புமுறைக்கு மாறான வன்முறைச் சாதனைகளைக் கூடப் பயில்வான் வித்தைப் பாங்கில் உட்கொண்டிருப்பது. எனவே வலிந்து கட்டிச் சுவாமியைக் கறக்கும் வழக்கமற்ற சநாதன சைவத்துக்கு இவற்றால் ஆவதொன்றில்லை எனக் கண்ட சைவஞானிகள் வைஷ்ணவத்தைப் புறச்சமய நிரலிலும் சாக்கைத்தை அகப்புறச் சமய நிரலிலும் ஒதுக்கிக் காலங்கள் பலவாய்விட்டன. உள்ள உண்மை இங்ஙனமாக, இவ்விடைகாரர் புரட்டும் புரட்டுப் பாரம்பரியமான சைவ ஞான மேன்மைக்கு மாசு பூசுவதாய் முடிகின்றது.

இப்படி வெட்படை மழுப்பலிற் பொழுதை வீணாக்காது சொன்னவர் எவராயிருந்தாலும் நம்மவர் அவசியம் உற்றுணர வேண்டிய ஒரு உண்மையை நமக்குணர்த்துகிறார் என்ற கௌரவ கண்ணியத்துடன் அதற்கு உரிய பரிகாரம் மேற் கொள்ளப்படுமாயின் அது பண்புடைமையாகும். மானம் பேணும் மார்க்கமுமாகும். பகையுள்ளும் பண்புள பாடறிவார் மாட்டு (பாடறிவார் மானமறிவார்) என்ற திருக்குறளிலக்கணத்தில் இதுவுமடங்கும்.

மேலும் ஷண்மதக்காரர் கூறுவது போன்று இவ் வைஷ்ணவமும் சாக்தமும் தான்தோன்றிகளான தனி முதன்மைச் சமயங்களுமாகா. சனாதன சைவம் வேத காலத்திற்கும் முற்பட்டதென்ற பிரசித்தமான அபிப்பிராயம் அதற்குச் சான்று. சநாதன சைவத்துக்கு அவ்வைந்தும் உள்ளடக்கமாதல் அதன் தத்தவ ஞான அமைதி காட்டும். மொஹஞ்சதாரோ போன்ற இடங்களிற் கிடைத்துள்ள புதை பொருளாராய்ச்சிச் சின்னங்கள் அவ்வ பிப்பிராயத்துக்குச் சான்று. எனவே, ஆதிச் சமயமாயிருந்துள்ள சநாதன சைவத்தின் லௌகிக வேட்கைக்கு முதன்மை கொடுக்காத ஞான நோக்குப் பிடிக்கு நின்று பிடிக்கும் ஸ்திரத்தன்மையும் பொறுமையும் வாய்க்கப் பெறாதோர் சநாதன சைவத்திலிருந்து இஷ்ட பிரகாரம் பிரிந்து நின்றமைந்தவை அவை எனல் துணிபாம்.

இத்தகைய சநாதன சைவத்தைச் ஷண்மதங்களில் ஒன்றான சைவமாக நாட்ட முயலும் இவ் விடைகாரர் இந்து சமயப் போர்வையில் நின்று

கொண்டு சைவ மகிமைக்கு விளைக்குங் கேட்டை விட, அதே போர்வையில் நின்று பெருங்கேடு. விளைக்கும் மற்றும் ஒரு பகுதியார் சிலரையும் உடையது நம் சமூகம். அவர்கள் கோலத்திற் சைவராயிருப்பர். தொழிலிற் சிவாசாரிய அந்தஸ்துள்ளவராயுமிருப்பர். அதே வேளை நாராயண, முகுந்த, அச்யுத, கிருஷ்ண மந்திர பராயணராயுமிருப்பர். அத்துடன் சாக்த சக்தி உபாசனையாளராயுமிருப்பர். எல்லாவற்றுக்குந் தாசர் இவர்கள். இந்து சமயப் பெயர் இவர்களுக்குத்தான், வேண்டிக் கிடக்கிறது போலும். தமது சுய அபிலாஷைகளைச் சநாதன சைவப் பொதுசன அபிலாஷைகளாகத் தோற்றுவித்துச் சைவாலயங்களில் இராம ஜயந்தி, உறியடி விழா, சக்கர பூஜை சாக்த மூர்த்திப் பிரதிஷ்டைகள் செய்விப்பவர்களாயுமிருப்பர். இதுவரை ஆங்காங்கு சில சைவாலயங்களில் இவர்கள் கைவண்ணங்கள் இடம் பெற்றிருப்பதும் விஷயமறிந்த வட்டாரங்களில் அது பற்றிய சர்ச்சைகள் கிளம்பியிருப்பதும் அகில உலகச் சைவப் பெருமன்றம் (W. S. C) வரை போய் அகில சைவ உலகப் பிரச்சினையாக அது உருவெடுத்திருப்பதும் சநாதன சைவ வரலாற்றரங்கில் இன்றைய பரபரப்பூட்டுஞ் செய்தியாகிறது. இத்தந்திரத்தில் வீழ்ந்துவிட்ட ஒரு சைவக் கோயில் முகாமையாளருக்கு, குறித்த W. S. C தலைவர் சீலத்திரு சிவநந்தி அடிகள் (இலண்டன் மெய்கண்டார் ஆதீனம்) விடுத்திருக்கும் ஆணையுரை இங்குக் கருதத்தகும். More importantly we appeal to you,

Not to play into the hands of smartha Brahmins to use this as a subtle and calculated tactics and from within. ஸ்மார்த்தர்கள் தோற்றந் தெரியா வகையில் உள்ளுக்குள்ளாக நின்றியற்றும் இத்திட்டமிட்ட தந்திரம் பலித்தற்குபகாரமாம் வண்ணம் அவர்கள் கையில் நின்று விளையாடாதீர்கள் என்பது அடிகள் ஆணை. மரபு வழிச் சைவாதீனங்கள் இத் தகராறுகளில் மரியாதைக் கொதுங்கினர் போல் வாய் வாளாதிருக்கும் இக்கால கட்டத்தில் அடிகள் தனி யாதீனமாக நின்று துணிச்சலாக வெளியிட்டிருக்கும் இவ்வாணை அக்ஷரலக்ஷம் பெறும்.

சக்கரபூசை வழக்கம் சைவாலயங்களில் அதிகரிக்கப் பார்க்கிறது. அது சாக்த வழக்கம் என்பது சைவப் பொது மக்களுக்கு மறைக்கப்பட்டாலுங் கூட, இது நிகழத்துஞ் சிவாசாரியார்கள சிலர் இதற்கு உரிய தகைமை பெற வேண்டித் தூரம் போய்ச் சாக்த தீக்ஷை பெற்று மீண்டு தம் கோயிலோடு அயற் கோயில்களிலும் இது நடத்திவருதல் மூலம் குட்டு வெளியாகியும் விடுகின்றது. சைவ விசேட தீட்சையில் வைத்தே சிவ பூசை எழுந்தருளிச் செய்து கொடுக்கப்பட்டு மேல் சிவாசாரிய தீட்சையும் பெற்றுச் சிவபூசையை முன்னோடி நியமமாகக் கொண்ட பரார்த்த பூஜைக்கு நியமனம் பெற்ற இவர்கள் அந்நியமந் தவறித் தேடிப் போய்ச் சாக்த தீட்சைத் தகுதி பெற்று வந்து சிவபூசைச் செழிப்பை இன்றியமையாத சைவக் கோயிலிகளில் சாக்த சக்கர பூசையாற்ற வேண்டுமளவுக்கு என்னதான் கெடுமதி நேர்ந்ததோ இச் சைவ சமூகத்துக்கு.

சிவனே நமது முதல்; நமது வாழ் முதல்; உயிரில்லாமல் நமக்கியக்கமில்லாமை போல அவரில்லாமல் உயிர்கியக்கமில்லாமையால் அவர் நமக்கு உயிர்குயிர். அவரால் நாம் ஏற்றம் பெறுவதும் அவர் நம்மை ஈடேற்றுவதும் அநாதிமுறையான பழைமையொடுபட்டவை. அதனால், எந்தவொரு நிபந்தனையுமின்றியே உள்ளார்ந்த உணர்வு

உருக்கத்துடன் அவரை நினைவதுந் தொழுவதுந் சிவாகம விதிப்படி அதற்கடுத்தன செய்தலும் நம் தர்மக் கடமை என்று இயல்பான அன்புறவினால் சிவனைத் தொழுவதே சநாதன சைவ வழிபாட்டு நெறி. சிவபூசையை விடச் சிறந்த பூசை வேறில்லை என்பதும் அநுபவ உண்மை. எண்ணிக்கையிற் பதினெண்ணாயிரத்துக்கும் மேற்பட்ட சைவத் திருமுறைப் பாடல்கள், பதினான்காய் மலர்ந்துள்ள சைவ சாஸ்திரங்கள் அனைத்தும் ஒரே முகமாய் வற்புறுத்துவது இதனையே. சிவாகமங்களிற் கிரியா காண்டம், ஞான காண்டம் இரண்டும் நெறிப்படுத்துவதும் இதனையே ஆதலில் சிவாகமங்கள் விதித்த வழிபாட்டு மரபுக்கு வேறாக உள்ள எதுவும் நமக்கு வேண்டாதன என்பது மட்டுமல்ல; நமக்குப் பழுது விளைப்பனவுமாம் என்பது நியாய பூர்வமான சைவத் துணிபு. குறித்த ஸ்மார்த்த வல்லபங்களாற் பல வகை எதிர் பார்ப்புக்களை முன்னிட்டுப் பகட்டுக் கிரியை முறைகளால் நமைமுறைப்படுத்தப்படும் வழிபாட்டு முறைகள் குறித்த சைவத் துணிபை நிராகரிக்கும், விஷமத்தனமான யத்தனங்கள். ஆதலால் சைவக் கோயில்களில் அவற்றை அடுத்தலாகாது. எனவே இப்பழுதுகளுக்கு வாய்ப்பளிக்கும் இந்து சமயப் பெயர்ப் போர்வை விலக்கப்பட்டேயாக வேண்டும் என்பது சநாதன சைவ மகாஜன நிலையாகும்.

எனில், ஒரு எதிர்பார்ப்புமேயில்லாமற் சிவனிடத்து உயிர்க்கு அன்பு நிகழ்தல் அசம்பாவிதம் என்பரேற் சொல்லுதும்; இயல்பிலே தொடர் புள்ளவனாயிருக்கும் இரண்டிலே ஒன்று மற்றதில் அன்பு கொள்வதற்கு எந்த எதிர்பார்ப்பும் இருப்பது இல்லை. தாய் தன் சிசுவில் அன்பு கொள்ளுதற்கும் சிசுதாயில் அன்பு கொள்ளுதற்கும் எதிர்பார்ப்பு என ஒன்றின்மை பற்றி அறிவீர்கள் தானே. அது போல்வதே இதுவும். உயிர்க்கு உயிர் சிவன் என்பது எப்பவோ முடிந்த உண்மையாயிருக்கையில் சிவனிடத்து உயிர்க்கு இயல்பாகவே அன்பிருக்கும் என்பதற்கு ஆட்சேபம் யாதோ? "ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ".

இனி, நிபந்தனையின்றியே சிவன் உயிர்க்கு அருளுகின்றாரெனில் வழிபாடு அவசியமாவ தில்லையே என்பீராயின் கேளும். அதன் தேவை உயிரின் நிலையைப் பொறுத்து எற்படுகிறதாக அறிமின். சைவ சித்தாந்த ஞானத்தின்படி உயிர் இயல்பாகவே மலப் பிடிப்பும் உள்ளதாய் இருத்தலாலும் அம்மல மயக்கம் அதன் ஞானப் பேற்றுக்கு நிரந்தரத் தடையாய் இருப்பதாலும் அத்தடை நீக்கம் சிவனருளை முன்னிட்டு நிற்கும் உயிரின் முயற்சியின் பேறாக அதன் உள்முகத்தில் உணர்வுபூர்வமாக நேரும் திருத்தங்களின் வாயிலாகவே நீக்கப்பட வேண்டியிருத்தலாலும் அம்முயற்சி சிவனிடத்துள்ள இயல்பான தன் அன்பைப் பெருக்குவதொழிய வேறின்மையாலும் உயிர் வழிபட்டேயாதல் வேண்டும் தேவை இருக்கவே இருக்கிறதென்க.

எனில் சக்கரபூஜை முதலியவற்றாலும் அப்பேறுகள் வருமென்றால் என்ன? என்பீராயின் அதையுங்கேளும். இவற்றை ஏற்கும் கடவுளரான சக்தி நாராயணன் என்போர் முழுமுதற் கடவுளர் அல்லர். ஏகோஹிருத்ர உருத்திரன் ஒருவனே முதல்வன் எனக் கர்ச்சிக்கிறது வேதம். 'ஒருவன் என்னும் ஒருவன் காண்க' என்கிறது தமிழ் வேதம். அதனால் முடிவான பலனான ஞானப் பேற்றை வழங்கும் நிலையில் அவை இல்லை. மேலுத்தியோகஸ்தர் ஒருவரின் கட்டுப்பாட்டில் உள்ளாருக்கு அவருடைய தகைமை (power) இல்லை என்பது தெரியுந்தானே. இவற்றைச் செய்பவர்

நோக்கமும் சுகபோக அதிர்ஷ்டப் பேறு. சிவனது அதிகாரத்துக்குட்பட்டிக்கும் சக்தி, நாராயணர் ஆன இவைகள் வழங்கக் கூடியனவும் அப்பேறுகளே. இயல்பிலேயே சுகபோக அதிர்ஷ்டப் பிரியராயிருக்கும் நம்மவர்க்கு அவற்றையே மேலும் வழங்குவதனால் அவர்களுக்கு நீங்க வேண்டிய மலபந்தம் மேலும் வீங்கும். அதனால் தான் சைவாலய வழிபாட்டாளர்க்கு அவற்றினாற் பழுது நேரும் என முன் சொல்லப்பட்டதென்பதையும் இதில் வைத்துக் கண்டு கொள்க.

இங்ஙனம் சைவாலயங்களுக்குப் பழுதான வற்றை விளைக்கும் போர்வையாய் நின்றுதவும் இந்து சமயப் பெயர் வழக்கினால் நேரும் விரும்பத் தகாதவைகள் மேலும் பலவுள.

சநாதன சைவர்க்குச், சைவம் என்ற வழக்கு எவ்வளவுக்கு இன்றியமையாதது என நம் சாஸ்திரங்களும் அனுபவமும் சொல்லுகின்றனவோ அவ்வளவுக்கு அதைப் புறந்தள்ளி விடுகிறது இவ்வழக்கு.

சைவப்பிள்ளைகள் படிக்கும் சைவசமய பாடப் புத்தகங்களின் பெயரே இந்து சமயப் பாடப்புத்தகமாக மாற்றப்பட வேண்டும் என்ற அருட்சி ஒரு பக்கம்.

எங்கள் சிவாசாரியார்கள் தங்கள் சங்ககத்துக்கு இந்துக்குருமார் ஒன்றியம் என்று பெயர் வழங்க வேண்டுமாம். சிவாசாரியார் சங்கம் என்ற பெயரைவிட இந்துக்குருமார் சங்கம் என்ற பெயர் வெகு எடுப்பாம். இதற்குள்ளே கள்ளமொன்றிருப்பதாகவும் பேசிக் கொள்கிறது பொதுசனம். வேதாந்த மேல் பீடத்துக்குச் சைவம் பிடிக்காதாம். இந்து தான் பிடிக்குமாம். சிவன் தயவை விட அதன் தயவையே சிவாசாரியார்கள் வேண்டி நிற்கிறார்கள் போலும் என்று செய்தி அடிபடுகிறது.

இந்தப் பெயர் வழக்கிருக்கு மட்டும் இதன் போர்வையில் தந்தொழிலாற்றும் மேற்கண்ட பேர் வழிகளின் செற்பாடுகள் இருந்து கொண்டேயிருக்கும். இந்து சமயத்துக்குரிய ஆறில், ஒன்றில் ஒரு அம்சத்துக்கு உரியது மற்றதில் அதே அம்சத்துக்கு சமம் என்ற நிரூபணமும் நடந்து கொண்டேயிருக்கும். சைவத்தில் துர்க்கை என்பது சக்தியின் ஒரு பெயர்.

சாக்தத்தில் சக்தியின் ஒரு பெயர் இராஜராஜேஸ்வரி. ஆதலால் இரண்டும் ஒன்று தானே என்ற நிரூபணம் கட்டாயம் நடக்கும். (மலேசியாவில் இப்படி நடந்துமிருக்கிறது) வேதாகம ஆதாரமுள்ளது துர்க்கை. சைவ நூல்கள், திருமுறைகளில் மட்டுமல்ல தமிழிலக்கியங்களிலேயே ஆட்சியுள்ளது துர்க்கை. சைவ சித்தாந்தத்தில் பராசக்திக்கு ஓதப்பட்ட இலக்கணமெல்லாம் வேதத்தில் வைத்தே தன் பேரில் விரித்தோதப்பட்டிருப்பது துர்க்கை. இராஜராஜேஸ்வரிக்கு இம்மூன்றில் ஒன்றுமில்லை. அது சர்வ சாதாரணமாக ஒரு புராண வார்ப்பு. அது பௌராணிகம். சைவத்துக்கு விதியல்ல என்ற பாகுபாடறியாப் பொதுசனம் அவர்கள் நிரூபணத்தில் எடுப்படும் நிலை என்றும் நிலவும். இது உதாரணத்துக் கொன்று.

சுருகங்கச் சொன்னால் சநாதன சைவத் துக்குள்ள தனித்துவமான உயர் பண்பிலட்சணங்கள், மானம், மகிமைகள் எல்லாம் மட்டந்தட்டப்பட்டுச் சைவ சித்தாந்த ஞான உண்மை விளக்கத்துக்குச் சரியான சமயப் பின்னணி விளக்கம் ஒன்றில்லாத வெறுமை நிலை விளைந்தே ஆகும். மலேசியா போன்ற வெளிநாடுகளிற் சிவாசாரியத்துவம் பண்ணும் மேற் கண்ட குழுவினர் சிலர் (சிவ நந்தி அடிகள் வாக்கில் ஸ்மார்த்தர்) தமது தவறான செயற்பாடுகளை யதார்த்தப் படுத்தும் நோக்கில் இங்குள்ள சநாதன சைவ நிலை பற்றித் தவறான செய்திகளை அங்கு பரப்பி வருகிறார்கள். Now a days it is a common

sight to see the instalation of RAJARAJESWARY in MURUGAN temples in Sri Lanka. There are nine RAJARAJESWARY temples in Jaffna.

இலங்கை முருகன் கோயில் எல்லாம் இராஜராஜேஸ்வரி பிரதிஷ்டை; யாழ்ப்பாணத்தில் ராஜாராஜேஸ்வரி கோயில்கள் ஒன்பது என்பதாகச் செய்தி. நாமும் இலங்கையர், யாழ்ப்பாணத்தார் என்ற கோதாவில் இவற்றின் உண்மை நிலைமை ஒருக்கால் உசாவிப் பார்க்கலாந் தானே.

இந்து சமயப் பெயர் வழக்கம் சைவ சமூகத்திற் பகிஷ்கரிக்கப்பட்டேயாக வேண்டிய அவசியத்தைத் துடியாக எடுத்துக் காட்டுவது இது.

இன்னுமொன்று அவசியமாகின்றது.

"ஏலவே தமிழர் உறைபதிகளாயிருந்த டோபன் மொறீஷியஸ், மலேசியா சிங்கப்பூர் போன்ற நாடுகள் தற்போது தமிழர் புலம் பெயர்ந்தமர்ந்த அமெரிக்கா, கனடா, சுவிஸ், இங்கிலாந்து, நோர்வே, பிரான்ஸ், ஜேர்மனி, முதலாம் நாடுகள், சமீப காலத்தில் சைவர்களாய் மாறிய அமெரிக்கர் வாழும் கலிபோர்ணியா, நியூயோர்க், சன்பிரான்சிஸ்கோ, ஹ வாய் முதலிய நகரங்கள் அனைத்திலும் சைவர்களுடைய சமய ஸ்தாபனங்கள் எல்லாம் சைவம் என்ற பெயரிலல்லாதில்லாதிருக்கையில், அனைத்துக்கும் மத்திய ஸ்தாபனமாக அகில உலக சைவப் பெருமன்றம் (W.S.C) இருக்கையில், அவ்விஸ்தாபனப் பத்திரிகை தமிழிலும் ஆங்கிலத்திலும் சைவ உலகம் என்றே உலகெங்கும் உலாவி வருகையில் நாம் மட்டும் இந்துப் பெயர் தாங்கி நிற்றல் தகுதியாகாதே. அதுவும் சிவாகமங்களாற் பிரதி பாதிக்கப் பெற்றுச் சமயாசாரியர்களால் நற்சான்றளிக்கப் பெற்று நாவலர் பெருமானால் மீள் பிரதிட்சை செய்யப் பெற்ற சநாதன சைவத்தாய் நாட்டவராய நாம், நூற்றுக்கு நூறு சநாதன சைவரையே கொண்ட நாட்டவராகிய நாம், திருநெல்வேலி ஞானப்பிரகாசர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், காசிவாசி செந்திநாதையர் என்போரைத் தமிழகத்துக்கே முன்மாதிரியான ஞானிகளாகப் படைத்துக் கொடுத்த ஒரு சைவ நாட்டவராகிய நாம், மாற்றுப் பெயர் வழக்கால் நேர்ந்த பழுதுகளை நன்கறிந்து கொண்டிருக்கும் நாம் நம் ஸ்தாபானங்கள் அனைத்தும் சைவம் என்ற பெயரால் இயங்க வைக்க வேண்டியதன் இன்றியமை யாமையைச் சிந்தியுங்கள். சிந்தனை வழிச் செயற்படுங்கள்.

'பாஷாபிமானம் சமயாபிமானம் இல்லாதவர் வாழ்வும் ஒரு வாழ்வா

ராவ் பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை.

இதை இப்போதைக்கு ஒரு விளையாட்டாக எடுத்துக் கொள்வோமேல் "பிற்பயக்கும் பீழை பெரிது" ஆதல் நிஜம்.

*-சைவத் தமிழ் அறிவியற் பண்பாட்டியக்கம்*
*யாழ்ப்பாணம்*

தங்கள் பெறுமதி மிக்க அபிப்பிராயங்கள் பின்வரும் விலாசத்திற்கு சேர்ப்பிக்கப்படலாம்.

பண்டிதர்: மு. கந்தையா,
*சத்தி முற்றம்,*
*ஏழாலை மேற்கு,*
*ஏழாலை.*

# தீட்சை

செ. நவநீதகுமார்

சைவ சமயத்தவர் என்று சொல்லுவதற்குத் தகுதியளிப்பது தீட்சை. ஒவ்வொரு மதத்தவரும் அம்மதங்களிலே உள்ள சடங்குகளைச் செய்தே அச்சமயத்தவர் எனக் கொள்வர். இது போலச் சைவ சமயத்தவர் சமயப் பிரவேசத்திற்குச் செய்யப்படுவது சமய தீட்சை அல்லது சிவதீட்சை எனப்படும். தீட்சை பெறாதவர்க்கு விவாகம், அந்தியேட்டி முதலிய கிரியைகள் எவையும் இல்லை. இவர்கள் செய்யும் வழிபாடுகள், பூசை, தொண்டு என்பனவும் பயனில்லாதனவாகும்.

கண்ணன் தினமும் சிவபூசை செய்து வந்தான். உபமன்யுமுனிவருக்கு ஒருநாள் சிவபூசைக்குப் பூக்கள் கிடைக்கவில்லை. கண்ணன் பூசைசெய்த மலர்களை எடுத்து வருமாறு முனிவர் சீடர்களைப் பணித்தார். சீடர்கள் அப்பூக்களைக் கொண்டு வந்து கொடுக்க முனிவரும் சிவபூசை செய்தார். இச்செயலைக் கண்ணுற்ற கண்ணன் உபமன்யு முனிவரிடம் வந்து பூசையிற் பயன்படுத்தி நிர்மாலிய மாக்கிய மலர்கள் கொண்டு நீங்கள் பூசிப்பது சரியா? என வினவினான். நீ தீட்சை பெறாது சிவபூசை செய்கிறாய். நீ செய்யும் பூசையிற் பயனேதுமில்லை. உன்பூசையிற் பயன்படுத்திய மலர்கள் நிர்மாலியமும் இல்லை என்று முனிவர் கூறினார். கண்ணன் உபமன்பு முனிவரைப் பணிந்து தனக்குத் தீட்சை கொடுத்து மந்திரோபதேசம் செய்யும்படி வேண்டினான். முனிவரும் கண்ணனுக்குத் தீட்சை கொடுத்துச் சிவபூசை செய்யும் தகுதியை அளித்தார். இச்சம்பவத்தை "யாதவன் துவரைக்சிறையாகிய மாதவன் முடிமேலடி வைத்தவன்" என்ற பெரிய புராணப் பாடலால் அறியலாம்.

எனவே இறைவனைத் தியானித்து வழிபடத்தகுதி அளிப்பது சிவதீட்சையாகும். தீட்சை என்பதன் பொருள் ஞானத்தைக் கொடுத்து மலத்தைக் கெடுப்பது. இது சமயம், விசேடம், நிர்வாணம் என மூன்று வகைப்படும்.

சமயதீட்சை சாதாரண தீட்சை எனவும் நிராதார தீட்சை எனவும் இருவகைப்படும். பக்குவ ஆன்மாக்களுக்கு இறைவன் தானே நேரில் எழுந்தருளி மலத்தைக் கெடுக்கும் முறை நிராதார தீட்சை. அதாவது வேறு ஒரு வடிவத்தை ஆதாரமாகக் கொள்ளாது செய்வது நிர் ஆதாரம் எனப்படும்.

மும்மலங்களையும் உடைய நம் போன்றவர்களுக்கு இறைவன் மானிடவடிவில் உள்ள குருவை ஆதாரமாகக் கொண்டு மலத்தைக் கெடுப்பது சாதாரண தீட்சை. மானைக் காட்டி மானைப்பிடிப்பது போல எமக்குத் தெரிந்த குருவே ஞானசிரியராக இருந்து அருள் புரிவார்.

சமய தீட்சையானது கிரியை வகையால் நயன தீட்சை, ஸ்பரிச தீட்சை, மானசதீட்சை, யோக தீட்சை, வாசக தீட்சை, சாத்திர தீட்சை, ஔத்திரி தீட்சை என எழுவகைப்படும். நயன தீட்சை குருபார்வையினால் மாணவனின் மலத்தைச் சேதுதிப்பது. ஸ்பரிசம் தொடுகையினால் அதாவது குரு தமது கரத்தாற் சீடனைத் தொட்டு மலத்தைக் கெடுப்பது.

ஆலாலசுந்தரர் கைலைக்கு வரும் வழியிற் பாடியருளிய ஏழிசைப் பதிகமான ''தானெனை முன்படைத்தான் என்னுந் திருப்பதிகத்தை உலகத்தார் போற்றும் பொருட்டு வருண தேவனிடங் கொடுத்தார். வருணதேவனும் ஆலால சுந்தரரின் திருவருளைப் பெற்று அத்திருப்பதிகத்தைத் திருவஞ்சைக்களத்திற்குக் கொண்டு வந்து யாவரும் உணரும்படி வெளிப்படுத்தினான்.

- எஸ். கே. சாமி.

குருமானசீகமாகக் சீடனின் மனத்துட் புகுந்து மலத்தைச் சேதிப்பது மானச தீட்சை. சமய சாத்திரங்களைப் போதிப்பது வாசகதீட்சையாகும். பாசத்தினின்றும் விலகி ஆன்மாவானது சிவத்தை அடையும் மார்க்கத்தை உபதேசிப்பது சாத்திர தீட்சையாகும். குரு சிவயோக முறைகளைக் கூற அதை அப்பியாசம் செய்யும் படி உபதேசிப்பது யோக தீட்சையாகும். ஔத்திரி ஓமத்தோடு செய்யப்படுவது எனப் பொருள்படும். இது கிரியாவதி ஞானாவதி என இருவகைப்படும். கிரியாவா குண்டம் மண்டலம் என்பவற்றைப் புறத்தே அமைத்து முறைப்படி ஆகுதி பண்ணிச் சீடனின் பாசத்தை கெடுக்கும் முறை. குண்டம் மண்டலம் என்பவற்றை மனத்திலே கற்பித்து மானசீகமாக ஆகுதி செய்து சீடனின் மலத்தைச் சேதிப்பது ஞானவதி எனப்படும்.

திருஞான சம்பந்தருக்குச் சீர்காழியிலே இறைவன் நயனதீட்சை கொடுத்தார். "கோவாய் முடுகி அடுதிறக் கூற்றம் குமைப்பதன் முன்பூவா ரடிச்சுவடுபொறி" என்று அப்பரடிகள் இறைவன் வேண்ட இறைவன் நல்லூருக்கு வரும்படி பணித்தார். நல்லூரிலே "உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர் தம் சென்னி மிசைப் பாதமலர் சூட்டித் திருவடித் தீட்சையாகிய ஸ்பரிச தீட்சை கொடுத்து அருளினார் சிவபெருமான். சுந்தரமூர்த்தி நாயனாருக்குத் திருவதிகை வீரட்டானத்திற் சித்தடை மடத்திலும், மாணிக்க வாசகருக்குத் திருப் பெருந்துறையிலும் திருவடித் தீட்சை இறைவனால் அருளப்பட்டது.

தீட்சையிலே சபீசதீட்சை, நிர்பீச தீட்சை எனவும் இருவகை உண்டு. மந்திரங்களைப் பீசாக்கரத்தோடு சேர்த்துச் ஜெபம் பண்ணும் படி உபதேசிப்பது சபீசதீட்சை. இது அறிவொழுக்கங்களிற் சிறந்த உத்தமமான சீடர்களுக்கு உபதேசிக்கப்படும். நிர்ப்பீச தீட்சை பீசாக்கரம் இன்றி மந்திரத்தை மாத்திரம் ஜெபிக்குடம்படி உபதேசிப்பது. இது சிறுவர், முதியோர் நோயுற்றறோர் என்போர்க்கு உபதேசிக்கப்படுவது.

சமயதீட்சை பெற்று ஒழுங்காக அநுட்டானம் செய்யும் ஒரு சாதகனுக்குச் சிவபூசை செய்யும் தகுதியைக் கொடுப்பது விசேட தீட்சை. விசேட தீட்சை பெற்றவர் சிவபூசை செய்தல்லாது நீரேனும் உட்கொள்ளார். சமய விசேட தீட்சை பெற்றவர்கள் வினைகளைப் போக்கி முத்தி பெறும் பொருட்டுச் செய்வது நிர்வாணதீட்சை.

தீட்சை பெற்றவர்கள் காலையில் எழுந்து நீராடிச் சந்தியா வந்தனம் செய்து ஜெபம் பண்ணித் திருமுறைத் தோத்திர பாராயணம் செய்து இறைவனை வழிபடல் வேண்டும்.

எனவே தீட்சை பெற்றுச் சைவசமயிகளாகி ஒழுக்க நெறியில் நின்று இறைவனை வழிபட்டுப் பிறவிப் பயனை அடைவோமாக.

திருவாசகச் சிந்தனை:

# நீத்தல் விண்ணப்பம்

பண்டிதர். சி. அப்புத்துரை

நீத்தல் – நீக்கிவிடாதே; விட்டு விடாதே என்று விண்ணப்பம் செய்து கொள்வது என்பது ஒன்று. திருப்பெருந்துறையிற் காட்டிய ஞானாசிரியக் கோலத்தை மீண்டும் உத்தரகோசங்கையிற் காட்டியருள வேண்டுமென விரும்பியமைக் கமைவாக நடைபெறாமையால் தம்மை இறைவன் கைவிட்டதாகக் கருதி, என்னை விட்டு விடாதே என்று வருத்தத்தோடு இந்த விண்ணப்பத்தை அடிகள் செய்தாரென்பது.

தம்மை நீத்து இறைவன் தில்லைக்குச் சென்றமை பற்றிய விண்ணப்பம் – முறையீடு என்பது மற்றொன்று. புலன்வழி நுகர்ச்சி, பெண் வழிச் சேறல், இலட்சியமில்லாமை, பொய்மை வாழ்வு என்று இந்த வகையவான காரணங்களால் இறைவன் நீத்தானென வருந்துகின்றார். அப்படித்தான் தான் உலகியலில் மூழ்கியிருந்தாலும் உலகியல் வாழ்வில் விருப்பமில்லையென்றும், இறைவனுடனாகி வாழ்வதையே தாம் விரும்புவதாகவும் குறிப்பிடுகின்றார். நீ என்னைக் கைவிட்டால் யான் மிகக் கேவலமானவனாகி விடுவேன், என்றுங் குறிப்பிடுவர்.

இப்பதிகத்தின் திரண்ட பொருட் பிழிவாகப், பிரபஞ்ச வைராக்கியம் என்று திருவாசகத் திருவுள்ளக்கிடை குறிப்பிடும். உலகியலிற் பற்றில்லை என்று குறிப்பிடுவது அது. ஐம்பது திருப்பாடல்களைக் கொண்ட இப்பதிகம் கட்டளைக் கலித்துறை என்னும் பாவினத்தாலாயது. அந்தாதித் தொடையான் இயன்றது. பதிக இறுதித் திருப்பாடல் கடையவனே என்று நிறைவுறுவதையும், முதல் திருப்பாடல் கடையவனேனை என்று தொடங்குவதையும் அவதானிக்கலாம்.

இந்தப் பகுதியிலுள்ள திருப்பாடல்கள் மூலம் உலகியலிலே தமக்குள்ள வெறுப்பைக் காட்டும் அடிகள் தம்முடைய ஆற்றாமையையும் உணர்த்துகிறார்கள். யான் இழிந்தவன் என்பதை அறிந்து வைத்திருந்தும் ஆட் கொண்டு விட்டாய்; இனி என்னை விட்டு விடாதே; யான் நன்றாகத் தளர்ந்து போனேன். யான் காமுகன்; அதேவேளை உன்தொண்டிலும் விருப்புடையேன். ஆற்றங்கரை மரம் போன்று இன்று நிற்கின்றேன். உன்னை அடையவும் முடியவில்லை; உலகியலைச் சாரவும் வழியில்லை, என்று வருந்தியவர் காட்டியவை காண்போம்,

i. கொள்ளேர் பிளவக லாத்தடங்
கொங்கையர் கொவ்வைச் செவ்வாய்
விள்ளேன் எனினும் ....... (நீத். 2)

ii. காருறு கண்ணியர் ஆற்றங்
கரைமரமாய் வேருறு வேனை ... (நீத். 3)

iii செழிகின்ற தீப்புகு விட்டிலில் சின்மொழி
யாரிற்பன்னாள்
விழுகின்ற என்னை......... (நீத். 5)

iv. கொழுமணி ஏர்நகை யார் கொங்கைக்
குன்றிடைச் சென்று குன்றி
விழுமடியேனை.... (நீத். 27)

v. வலைத்தலை மானன்ன நோக்கியர்
நோக்கின் வலையிற்பட்டு
மிலைத் தலைக் தேனை ...... (நீத். 40)

vi. முதலைச்செவ் வாய்ச்சியர் வேட்கைவெந்
நீரிற் கடிப்பமூழ்கி
விதலைச் செய் வேனை..... (நீத். 41)

vii முழுதயில் வேற்கண் ணியரென்னும்
மூரித் தழல முழுகும்
விழுதனை யேனை (நீத். 44)

viii. உழைதரு நோக்கியர் கொங்கைப்
பலாப்பழத் தீயினொப்ப
விழைதரு வேனை...... (நீத்த. 46)

என இப்பதிகத்தில் மட்டும் எட்டு இடங்களில் மங்கையர் மையலிற்பட்டு மயங்கும் நிலை காட்டப்பட்டுள்ளது. பெண்ணின்ப நுகர்வின் கொடிய நிலை தெளிவுபடுத்தப்படுகின்றது. தெய்வீகத் தொடர்பையும் அறுக்கவல்ல பலம் வாய்ந்த உணர்வு அந்த உணர்வு. மழையின் இயல்பு பொருந்திய கண்களையுடைய மங்கையர் ஐம்புலன்களாகிய ஆற்றின் கரையிலே வேரூன்றி வளர்ந்து வரும் மரம் போலாகி மனம் அழுந்தி உள்ளது என்கின்றார்கள். ஆற்றங்கரை மரத்தின் அடிப்பகுதி நீர்ப்பற்றின்றித்தான் இருக்கும். ஆனால் வேர்கள் ஆற்றினுட் புகுந்து நீரை உறிஞ்சிச் செழிப்புடன் வளர வைக்கும். ஆனாற் பெரிய நீர்ப்பிரவாகம், புயல் மரத்தை வீழ்த்திவிடும். கணிகையருடனான வாழ்வும் இத்தகையது தான். ஆரம்பத்தில் நிறைந்த இன்ப வாழ்வு போன்ற மயக்கத்தின் பாற்படுத்தி முடிவில் அடியோடு கெட்டொழியச் செய்யும் என்பது.

i. வளர்கின்ற நின்கரு ணைக்கையில்
வாங்கவும் வாங்கியிப்பால்
மிளிர்கின்ற என்னை...... (நீத். 2)

ii. மறுத்தனன் யானுன் அருளறி
யாமையின் என்மணியே
வெறுத்தெனை..... (நீத். 2)

iii. இருதலைக் கொள்ளியி னுள்ளெறும்
பொத்து நினைப்பிரிந்த
விரிதலை யேனை (நீத். 9)

iv. கடலினுள் நாய்நக்கி யாங்குன்
கருணைக் கடலினுள்ளம்
விடலரி யேனை..... (நீத். 13)

v. வெள்ளத்துள் நாவற்றி யாங்குன்
அருள்பெற்றுத் துன்பத்தினின்றும்
விள்ளக்கி லேனை (நீத். 14)

vi. களிவந்த சிந்தையொ டுன்கழல்
கண்டும் கலந்தருள
வெளிவந் திலேனை......... (நீத். 2)

vii. தனித்துணை நீநிற்க யான்தருக்
கித்தலை யால்நடந்த
வினைத்துணை யேனை (நீத். 39)

viii. கதியடி யேற்குன் கழல்தந்
தருளவும் ஊன்கழியா
விதியடி யேனை.... (நீத். 42)

ix. மன்னவ னேயொன்று மாறறி
யாச்சிறி யேன் மகிழ்ச்சி
மின்னவ னே...... (நீத். 43)

x. பாடிற்றி லேன்பணி யேன்மணி
நீ யொளித்தாய்க் குப்பச்சூன்
வீடிற்றி லேனை..... (நீத். 45)

xi. பழிப்பில்நின் பாதப் பழந்தொழும்
பெய்தி விழப்பழித்து
விழித்திருந் தேனை..... (நீத். 47)

என்னுந் தொடர்கள், அடிகள் அறியாமையிற் புரழ்ந்த செய்திகளைத் தெரிவிக்கின்றன. மெய்ப் பொருளானவனே, பொய்யானகிய என்னை, என் குற்றங்களை, என் குலத்திலுள்ள குற்றங்களை நீக்கி என்னை ஆட் கொண்டாய். இப்படி ஆட்கொண்ட உன்னை, யான் என்னிலுங் குறைந்தவனாகக் கருதித்

தலையினால் நடக்கத் தொடங்கினேன். கடல் போன்ற நீர்ப் பிரவாகத்துள் நிற்கும் நாய் தண்ணீரை நக்கிக் குடிப்பது போல, உன் கருணைக் கடலுள் நின்றும் அக் கருணைப் பிரவாகத்தை அநுபவிக்க முடியாதவனானேன். உன்னைப் பாடவில்லை; பணியவில்லை; உனக்குத் தொண்டு செய்யவில்லை; நீ உதவ வந்தும் அதை உதாசீனஞ் செய்து விட்டேன்.

i. மாறுபட் டஞ்சென்னை வஞ்சிப்ப
யானுன் மணிமலர்த்தாள்
வேறுபட் டேனை . ...... (நீத்.11)

ii. நெடுந்தகை நியென்னை ஆட்கொள்ள
யானைம் புலன்கள் கொண்டு
விடுந்தகை யேனை. . . . . (நீத். 12)

iii. ஆனைவெம் போரிற் குறுந்தூ
றெனப்புல னாலலைப்புண்
டேனை . . . . . (நீத். 21)

iv. எறும்பிடை நாங்கூ ழெனப்புல
னாலரிப் புண்டலந்து
வெறுந்தமி யேனை . . . . . (நீத். 25)

v. புலன்கள் திகைப்பிக்க யானும்
திகைத்திங்கொர் பொய் நெறிக்கே
விலங்குகின் றேனை . . . . . (நீத். 28)

vi. மத்துறு தண்தயி ரிற்புலன்
தீக்கதுவக் கலங்கி
வித்துறு வேனை . . . . . (நீத். 30)

vii. அடற்கரி போலைம் புலன்களுக்
கஞ்சி அழிந்தவென்னை
விடற்கரி யாய் . . . . . (நீத். 32)

viii. பொதும்புறு தீப்போற் புகைந்தெரி
யப்புலன் தீக்கதுவ
வெதுப்புறு வேனை . . . . . (நீத். 36)

'நீ எதை வேண்டினுஞ் செய்' என்று இருக்க வேண்டிய இடத்து, ஐம்புலன்கள் மாறுபட்டு வஞ்சித்தமையை இந்தத் திருப்பாடற் பகுதிகளிற் காணுகின்றோம். ஐம்புலன்கள் மிகுந்த வலிமையுடையவை. அவை என்னை வஞ்சித்துத் தாக்க யான் அவற்றின் வயப்பட்டு, உன் திருவடிகளுக்கு மாறுபட்டு நடந்து விட்டேன், என்று வருந்துகின்றார்கள்.

இங்கே காட்டப்பட்டுள்ள மூன்று பகுதிகளிலும் அடிகள் தம் தவறுகளைச் சுட்டிக் காட்டுகின்றார். இத்தவறுகளே தம்மை இறைவன் விட்டு நீங்கியமைக்குக் காரணமாகலாமென அடிகள் மனதிற் பட்டுளது. அதனாலேதான், பொருத்தமிலாத என்னை – தூய்மையற்றவனாகிய என்னை – ஆட் கொண்டாய், இப்போது விலகிவிட்டாய், என்னை விட்டுவிடாதே என்று வேண்டுகின்றார் போலும். பொய் யொழுக்கங்களில் ஈடுபாடு கொண்ட என்னை விரும்பி ஏற்றுக் கொண்டு உன் திருவடிகளில் இடங்கொடுத்தாய். யான் அவற்றைப் பெற்றுக் கொண்ட பின்னும் அவற்றை அநுபவிக்க விதியற்றவனானேன். ஒப்பற்ற பெருமையை உடையவன் நீ. என்னை விட்டுவிடாதே. நீ யென்னைத் தவிர்த்து விட்டால் யான் யாருமற்றவனாய் வருந்தி நிற்பதைப் பார்ப்போர், நீ யாருடைய அடியவன் என்று என்னைக் கேட்பாகள். அந்த வேளை, திருவுத்தரகோசமங்கைக்கு வேந்தனாகிய சிவனது சிறப்புடை அடியார்க்கு அடியவன் யான் என்று சொல்வேன். அந்த வகையில் எல்லோரும் உன்னைப் பார்த்துச் சிரிக்கச் செய்வேன், என்று அடிகள் உரிமையோடு பேசுகின்றார்கள்.

இந்தநீத்தல் விண்ணப்பம் திருவுத்தர கோசமங்கை என்ற தலத்திற் செய்யப்பட்டது என்பர். என் நெஞ்சிற்பாயும் ஐம்புல வின்பமாகிய நஞ்சை நீக்கி உன் அருளமுதத்தைப் பாயச் செய்ய வேண்டுமென வேண்டுதல் செய்யும் நிலை கண்டோம். நாமும் அவ்வழி நிற்போம்.

திருவிளையாடற் புராணம் :

# வெள்ளை யானை சாபந் தீர்ந்தமை

- கூடலான்.

துருவாச முனிவர் காசியிற் சிவாகம விதிப்படி ஒரு சிவலிங்கத்தைத் தாபித்தார். பூசை, தோத்திர நியமம் ஒழுங்காக நடைமுறைப் படுத்தப்பட்டது. இந்த முறைமை தொடரும்போது ஒருநாள் சிவபிரானுடைய திருமுடியினின்றும் ஒரு தாமரைப்பூ விழுந்தது. துருவாச முனிவர் அதனைத் தம்முடைய இரண்டு கைகளையும் விரித்து ஏந்திக் கண்களிலும், சிரசிலும், மார்பிலும் ஒற்றிச் சரீரம் பூரித்து மனமகிழ்ச்சியுடன் சுவர்க்கலோகத்திற்குச் சென்றார். போகும் போது இந்திரன் அசுரர்களைக் கொன்று தன் நகரமாகிய அமராவதியை வந்தடைந்திருந்தான். அங்கே அவனுக்கு வெற்றிமாலை அணிவித்துச் சேவசேனைக் கடல் ஆரவாரிப்ப, வேதமும் பல்லாண்டும் ஒலிக்க எல்லாத் திசைகளிலும் வாத்தியங்கள் முழங்கத் தேவ மகளிர் பாடும் இனிய இசையைச் சுவைத்திருந்தான். வெண் கொற்றக் குடை நீழலில், இருபுறமும் சாமரை நிரைகள் இரட்ட, வெள்ளை யானைமீது பவனி வந்தான். அந்தவேளை தேவர்கள் அருகே வந்து, தங்களுக்கு விருப்பமானவற்றைக் கையுறையாகக் கொடுத்து வணங்கி நின்றனர். துருவாச முனிவரும் ஆசி கூறித் தம்முடைய கையிலிருந்த தாமரைப் பூவை நீட்டினார். விவேக மென்பது சிறிது மில்லாத இந்திரன் தன் செருக்கினால், அதனை ஒரு கை நீட்டி வாங்கி வெள்ளை யானையின்மேல் வைத்தான். வெள்ளை யானை தன்மீது வைக்கப்பட்ட பூவைக் கீழே விழுத்திக் காலினால் மிதித்துச் சிந்தியது. அது கண்ட துருவாச முனிவர் நெருப்பெனப் பார்த்தார். தேவர்களெல்லாம் பயந்தோடும்படி பெருங்கோபங் கொண்டார்.

"சிவனுடைய திருவடித் தாமரைகளை மறவாத மெய்யன்பர்கள் அருவருத்துத் தள்ளிவிட்ட இழிந்த செல்வத்தினாலே தருக்குற்ற இந்திரா! என்ன காரியஞ் செய்தாய்? தேவர்களுடைய கையுறையை நன்கு மதித்தாய். சர்வலோக நாயகராகிய சிவபிரானுடைய முடியிற் சாத்தப்பட்ட தாமரைப் பூவை வழிபடாது வாங்கி யானை மிதித்துச் சிந்தும்படி அதன்மேல் வைத்தாயே! மூடா, விட்டுணுவுடைய இறுமாப்பும், பிரமனுடைய இறுமாப்பும், உன்னுடைய இறுமாப்பும் பரமபதியாககிய சிவபிரானைப் பூசித்த பேறு என்பதைச் சிறிதும் நினைந்திலையே! பேதாய், இச்சிவத் துரோகத் தினாலே, பாவீ! உன்னுடைய தலை பாண்டியன் ஒருவனுடைய வளையினாலே சிதறக் கடவது. இந்த வெள்ளை யானை காட்டானையாகக் கடவது," என்று சபித்தார். உடனே தேவர்கள் நடுங்கித், துருவாசமுனிவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். எழுந்து ஆடை ஒதுக்கிப், பணிந்து, வாய் புதைத்து ஐம் பொறிகளையும் வென்ற சுவாமி, அடியேங்களுடைய அரசனும், வெள்ளை யானையும் பெருங் கொடும் பாவம் செய்தமையாற் சபித்துவிட்டீர்கள். இந்தச் சாபத்தை இப்போதே தீர்த்தருள வேணடும், என்று இரந்தார்கள். துருவாச முனிவர் திருவுளமிரங்கிச் சிவநிர்மாலிய நிந்தனை பரிகாரத்தினால் நீங்காது. இந்திரனுக்குத் தலையளவாக வந்தது முடியளவாகப் போகக் கடவது. வெள்ளை யானை காட்டானையாகி நூறு வருடங்கள் சென்றபின் முன்போல் ஆகக் கடவது என்று சாப விமோசனம் தந்தார்.

தேவர்கள் சிவபெருமானை வணங்கி விடை பெற்றுத் தூய நலந்திகழும் ஜோதி மயமான வெள்ளை யானையையும் உடன் கொண்டு மகோதை நகரிலுள்ள திருவஞ்சைக்களத்தை அடைந்தார்கள். நம்பியாரூரரும் திருக்கோயிலை வலம் வந்து, மதிலின் திருவாயினுக்கு வந்து ஆரூரரும் திருக் கோயினில் வலம் வந்து, மதிலின் திருவாயிலுக்கு வந்து சேர்ந்தார். தேவர்கள் சுந்தரரைக் கண்டு சிவாஞ்ஞையைத் தெரிவித்தார்கள். சுந்தரர் தம்மை மறந்து சிவனை நினைந்து நின்றார். தேவர்கள் அவரை வெள்ளை யானைமீது ஏற்றினார்கள். சுந்தரர் தம் தோழரான சேரமான் பெருமாள் நாயனாரை நினைத்து வெள்ளை யானைமீது சென்றார்.

– எஸ். கே. சாமி.

வெள்ளை யானை சுவர்க்கத்தை விட்டு அறிவழிந்து காட்டுயானையாகிக் காட்டு யானைகளோடு சேர்ந்து எங்குந் திரிந்து நூறு வருடங்கள் செல்லக் கடம்பவனத்திலே புகுந்து பொற்றாமரை வாவியைக் கண்டது. அப்பொழுது முன்னைய அறிவு தோன்றப் பொற்றாமரை வாவியிலே நீராடியது. உடனுங் காட்டியானை வடிவம் நீங்கியது. பழைய வடிவந் தோன்றியது. அப்பொழுது சிவபெருமானுடைய திருவருளினாலே சொக்கலிங்க மூர்த்தி எதிர் தோன்றக் கண்டு வணங்கிப் புழைக்கையிற் கொண்ட தீர்த்ததினாலே சிவலிங்கப் பெருமானுக்கு அபிஷேகம் செய்தது. திருப்பள்ளித் தாமஞ் சாத்திப் பூசையுஞ் செய்தது. உடனே சோமசுந்தரக் கடவுள் வெளிப்பட்டு நீ இங்கு வந்த காரியம் யாது? உனக்கு வேண்டும் வரம் யாது? என்று வினவியருள, வெள்ளையானை முன்னே தனக்கு நேர்ந்த சாபத்தையும் அதனாலே தாம் வந்த முறைமையையும், பிரம விட்டுணுக்களாலுங் காணமுடியாத தங்களை அடியேன் அடையப் பெற்றேன்; அடியேனுக்கு இனி ஒரு குறை உண்டாக முடியுமா? எமபெருமானே! உம்முடைய திருவடிகளைப் பிரியாது, இவ்வெட்டு யானைகளுடன் ஒன்பதாவதாக அடியேனும் உங்களுக் கெதிரே இவ் விமானத்தைத் தாங்க என்மனம் விரும்புகிறது. என்று விண்ணப்பம் செய்தது. கருணாகரராகிய சோமசுந்தரக் கடவுள் யானையின் மீது திருக்கடைக்கண் சாத்தித் தேவேந்திரன் நம்மிடத்து மெய்யன்புடையவன். ஆதலால் நீ அவனைத் தாங்குதல் நம்மைத் தாங்குதல் போன்று நமக்கு மகிழ்ச்சி தரும் என்று சொல்லி விடை கொடுத்தருளினார்.

வெள்ளை யானை வணங்கி விடைபெற்றுக் கொண்டு சொக்கலிங்க மூர்த்திக்குக் கிழக்குத் திக்கிலே போய் அங்கே ஐராவதம் எனத் தன் பெயரால் ஒரு நகரம் உண்டாக்கி, இந்திரேச்சுரர் என்று தன் இறைவன் பெயரால் ஒரு சிவலிங்கம் தாபித்துப் பூசை செய்து கொண்டிருந்தது. இந்திரன் "நம்முடைய யானை இன்னும் வந்தில" தென்று பின்னரும் ஒற்றரை விடுப்ப, வெள்ளை யானை சுவர்க்கத்தை அடைந்து இந்திரனை வணங்கித், தனக்கு நிகழ்ந்தவை அனைத்தையும் விண்ணப்பம் செய்து, இனிது வாழ்ந்திருந்தது.

*(ஆதாரம் : நாவலர் திருவிளையாடற் புராண வசனம்)*

# மாதிரி வினாத்தாள்

## ஆண்டு - 10

மிகச்சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1. சிவலிங்கத் திருமேனியிற் கண்டு வழிபடும் இறைவனின் திருமேனி
   1. அருவத்திருமேனி, 2. உருவத்திருமேனி
   3. அருவுருவத் திருமேனி, 4. நடராஜத் திருமேனி,.

2. மிகப் பழைய வேதமாக கருதப்படும் வேதம்
   1. இருக்கு 2. யசுர் 3. சாமம் 4. அதர்வம்

3. வேள்விகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டிராத வேதம்.
   1. யசுர் 2. சாமம் 3. அதர்வம் 4. இருக்கு

4. ஊழிக் கால இறுதியில் இறைவன் ஆடும் கூத்து
   1. பாண்டரங்கம் 2. கொடுகொட்டி
   3. கபாலம் 4. நர்த்தனம்

5. 'யாழ்முரி' என வழங்கப்படும் பதிகம்
   1. மாதர்ப்பிறைக் கண்ணி 2. சொற்றுணை வேதியன்
   3. மாதர் மடப்பிடியும் 4. மந்திரமாவது நீறு

6. நாவுக்கரசருக்கு சமணர்கள் இட்டபெயர்
   1. தருமசேனர் 2. மருணீக்கியார்
   3. தாண்டகவேந்தர் 4. உழவாரப்படையாளி

7. நாவுக்கரசரைச் சமணர்கள் கல்லோடு கட்டிக் கடலிலே விட்டபோது அவர் சென்றடைந்த திருத்தலம்
   1. திருவாரூர் 2. திருப்பாதிரிப் புலியூர்
   3. திரு வெண்ணெய் நல்லூர் 4. திங்களூர்

8. சுந்தரருக்குப் பெற்றோர் இட்ட பெயர்

1. நம்பியாரூரர்
2. ஆலால சுந்தரன்
3. வன்றொண்டர்
4. தம்பிரான் தோழர்.

9. மாணிக்கவாசகரை இறைவன் ஆட்கொண்ட திருத்தலம்.

1. திருவீழி மிழலை
2. திருப் பெருந்துறை
3. திருவாதவூர்
4. சிதம்பரம்

10. மாணிக்க வாசகர் பதிகங்கள் அடங்கும் திருமுறை

1. 3ம் திருமுறை
2. 4ம் திருமுறை
3. 6ம் திருமுறை
4. 8ம் திருமுறை

11. "என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே" என்னும் பதிகத்தைப் பாடியவர்.

1. சம்பந்தர்
2. அப்பர்
3. சுந்தரர்
4. மாணிக்கவாசகர்

12. திருத் தொண்டர் புராணத்தைப் பாடியவர்

1. நாவுக்கரசர்
2. சுந்தரர்
3. சேக்கிழார்
4. திருமூலர்

13. சகலகலா வல்லி மாலை பாடியவர்

1. அபிராமி பட்டர்
2. குமரகுருபரர்
3. தாயுமானவர்
4. அருணகிரிநாதர்

14. நிர்வாண தீட்சிதர் குருவாவதற்கு அதிகாரம் பெறும் பொருட்டுச் செய்து கொள்ளும் வினை முறை.

1. பட்டாபிஷேகம்
2. ஆசாரிய அபிடேகம்
3. சங்காபிசேகம்
4. மண்டலாபிடேகம்

15. இறைவனிடம் நயன தீட்சை பெற்ற அடியார்

1. அப்பர்
2. சுந்தரர்
3. மாணிக்கவாசகர்
4. சம்பந்தர்

அன்பு நெஞ்சங்களுக்கு,

## ஒரு சிறிய தகவல்

ஓராண்டைப் பூர்த்தி செய்துள்ள சைவநீதி உங்களைப் பெருமிதத்துடன் நிமிர்ந்து பார்ப்பதைப் புன்னகையுடன் வரவேற்கிறீர்கள் பெருமை அடைகிறீர்கள் என்பதை யாம் உணர்கின்றோம். வளர வளரப் பராமரிப்புச் செலவும் பெருகும் என்பதை நீங்கள் அறிவீர்கள் என்பதை யாம் அறிந்தது தான். ஒவ்வொருவரும் சந்தாதாரராகி உதவ விரும்புகின்றீர்கள் என்பதும் எமக்குத் தெரியும்.

| | |
|---|---|
| இலங்கையில் வருடச்சந்தா | ரூபா 200/- |
| ஏனைய நாடுகளில் | 15 U$$ அல்லது<br>10 ஸ்ரேலிங் பவுண் |

அனுப்ப வேண்டிய முகவரி

**C. NAVANEETHAKUMAR**
**Gnanavairavar Thevasthanam**
**42, Devas Lane,**
**Grandpass, Colombo - 14.**
**Sri Lanka.**



Reg. No: QD/66/ News 98. இவ் விதழ் சைவநீதி நிறுவனத்தினரால்
48B, புளூமன்டோல் வீதி, கொழும்பு - 13. என்னும் முகவரியிலுள்ள
யுனி ஆர்ட்ஸ் இல் அச்சிட்டு 1998-07-27 இல் வெளியிட்டப்பட்டது.

Printed by Unie Arts (Pvt) Ltd. 48. B. Bloemendhal Road. Colombo - 13.